அஸ்ரிச்சாயா அநீதி

32181

அவுரிச்சாய அநீதி

நூலின் பெயர் - அவுரிச்சாய அநீதி
ஆசிரியர் - கா. முனியாண்டி
பொருள் - வாழ்க்கைக் கதை
வெளியிட்டோர் - தமிழ்நாடு ஆதார கல்விச் சங்கம்
தே. கல்லுப்பட்டி-626 702
அச்சிட்டோர் - தி ஜான்சன் பிரிண்டிங் பேலஸ், சிவகாசி,
பதிப்பு - முதற்பதிப்பு ஜனவரி 91
பிரதிகள் - 5000
விலை - ரூ. 4.50

Name of the Book - Avurichchaya Anithi
Authour K. Muniandi
Subject Biography
Publisher Tamilnad Basic Education Society
T. Kallupatti - 626 702
Printer - The Johnson Printing Palace, Sivakasi.
Edition - First Edition January 91
Copies - 5000
Price - Rs. 4.50

ஆசிரியர் பேசுகிறார்

காந்தியடிகள் மேற்கொண்ட சத்தியாக்கிரகங்களோ பலப் பல. அவற்றுள் நம் மனத்தில் நிலையான இடம் பெறும் என்று இந்த சம்பாரன் சத்தியாக்கிரகம். இது அவுரிப் பயிர் அடிப்படையில் எழுந்ததால் இதற்கு அவுரிச் சாய அநீதி என்ற பெயர் கிட்டியுள்ளது.

பீகார் விவசாயிகளின் அச்சத்தைப் போக்குதல், சேவை செய்ய முன் வந்த பீகார் வக்கீல்களுக்கு அரிய பயிற்சி யளித்தல், பெரிய மனதுடைய டாக்டர் ராஜேந்திர பிரசாத், ஆச்சார்ய கிருபளானி போன்றவர்களைத் தேர்ந்தெடுத்தல், மக்களைத் தங்கள் கால்களில் நிற்க வைக்கப் பழக்குதல், நிர்மாணப் பணிகளில் ஈடுபடுதல் போன்ற பல சிறப்பு அம்சங்கள் இதில் காணப் பெறுகின்றன. மக்களின் வறுமையைப் போக்க கதர் திட்டம் உருவாவதற்கு இது ஒரு முன்னோடியும் ஆயிற்று. இது ஒரு தனி சிறந்த விவசாயப் போராட்டமும் கூட.

டாக்டர் ராஜேந்திர பிரசாத், டெண்டுல்கர், சத்திய சோதனை கர்த்தா ஆகியோர் இதை எழுதி முடிக்கப் பெரிதும் உதவியவர்கள். அவர்களுக்கு எனது நன்றி.

இது சிறுவர் முதல் பெரியவர் வரை படித்து அறிய வேண்டிய நூல்.

ஆக்க ரீதியான யோசனைகள் என்றும் வரவேற்கப்படும்.

தமிழ்நாடு ஆதாரக் கல்விச் சங்கம்
காந்தி நிகேதன் ஆசிரமம்
கல்லுப்பட்டி.

30.10.90
செயலாளர்



ஆசிரியர் - கா. முனியாண்டி தே. கல்லுப்பட்டி-626 702

எமது இதர வெளியீடுகள்

1. கிராமமே இந்தியாவின் உயிர்நாடி
2. கழிவா, செல்வமா
3. வாழ்விக்க வந்த கதர்
4. நேரு மாமா
5. காருண்ய வள்ளல் காந்தி
6. நாட்டிற்கு உகந்த நயமான கல்வி
7. பூ தான முனிவர்
8. காந்தி கண்ட தர்மகர்த்தா

விபரங்களுக்கு

தமிழ்நாடு ஆதாரக்கல்வி சங்கம்,

காந்திநிகேதன் ஆசிரமம்

T. கல்லுப்பட்டி-626 702

அவுரிச் சாய அநீதி

அத்தியாயம் 1

மோதி ஹரி கோர்ட் விசாரணை

மோதிஹரி கோர்ட் அறை. காம்பவுண்டுக்குள் 2000 பீகார் விவசாயிகள் எதிர்பார்ப்புடன் நிற்கின்றனர். போலீஸ் அவர்களை ஒழுங்குபடுத்திக் கொண்டிருக்கிறது. அன்று **1917 ஏப்ரல் 18ஆம் நாள்.** சரித்திர ஏடுகளில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய நாள் (இதே நாளில் 34 ஆண்டுகள் கழித்து விநோபாஜி பூதான இயக்கத்தை ஆரம்பித்தது குறிப்பிடத்தக்கது).

நடுப்பகல் 12.30 மணி ஆயிற்று. குஜராத்தி விவசாயி உடையில் ஒரு மெலிந்த உருவம் அங்கு வருகிறது. கூடியிருந்தோர் ஆர்ப்பாட்டத்துடன் 'ஜெய்' கோஷம் எழுப்புகின்றனர்.

அவர் சிரித்துக் கொண்டே கோர்ட்டுக்குள் நுழைகிறார்.

மாஜிஸ்திரேட்: தங்களுக்காக வாதாட வக்கீல் உண்டா?

நுழைந்தவர்: இல்லை, ஒருவரும் இல்லை.

அரசு வக்கீல் எழுந்து, இவருக்கு 144 தடை உத்தரவு இடப் பெற்றுள்ளது. அதன்படி ஏப்ரல் 16ஆம் தேதி இரவே சம்பாரணைவிட்டு வெளியேறியிருக்க வேண்டும். ஆனால் இவர் இன்னும் இங்குதான் உள்ளார். ஆகவே

கிரிமினல் சட்டம் 188ன்படி குற்றம் செய்தவர் ஆவார்.

நுழைந்தவர்: கோர்ட்டாரே, எனக்கு ஆர்டர் கிடைத்ததும் மாஜிஸ்திரேட் அவர்களுக்கு என்னுடைய பதிலை அனுப்பியுள்ளேன். அதில் ஆர்டருக்கு நான் ஏன் கீழ்ப்படியவில்லை என்பதை விளக்கியுள்ளேன். கோர்ட்டார் இதைப் பதிவு செய்து கொள்ளவேண்டும்.

இவ்வாறு சொன்னதும் மாஜிஸ்திரேட், அரசு வக்கீல், இதர அலுவலர்களுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. எனவே அரசு தரப்பு வக்கீல் வழக்கை ஒத்தி போடச் சொன்னார்.

ஆனால் குற்றம் சாட்டப் பெற்றவர் குறுக்கிட்டு அவ்வாறு செய்ய வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டார். ''நான் குற்றத்தை ஒப்புக்கொள்கிறேன். உங்கள் அனுமதியுடன் என்னுடைய வாக்குமூலத்தையும் சமர்ப்பிக்கிறேன்'' என்று கூறி, தான் ஏற்கனவே தயாரித்து வைத்திருந்த வாக்குமூலத்தைக் கோர்ட்டில் படிக்க ஆரம்பித்துவிட்டார். ''144 தடை உத்தரவை மீறினது போன்ற இந்தத் தீவிர நடவடிக்கையை நான் ஏன் எடுத்தேன்? என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம், உள்ளூர் அதிகாரிகளுக்கும் எனக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் தான். நான் இங்கு வந்தது மனிதாபிமானத்துடன் கூடிய தேச சேவை செய்வதற்கே. ''அவுரித் தோட்ட முதலாளிகள் எங்களை நல்லமுறையில் நடத்தவில்லை. ஆகவே நீங்கள் இங்குவந்து எங்களுக்கு உதவ வேண்டும்.''

இது சம்பாரண் விவசாயிகளின் நான் மறுத்துக் கூறமுடியாத கோரிக்கை. பிரச்னைகளின் உண்மை நிலை அறியாது நான் அவர்களுக்கு உதவ முடியாதல்லவா? ஆகவேதான் முடிந்தால் உள்ளூர் நிர்வாகம், தோட்ட முதலாளிகள் உதவியுடன் இதை ஆராய வந்துள்ளேன். இதில் எனக்கு வேறெந்த நோக்கமும் இருப்பதற் கில்லை. நான் வந்ததால் அமைதிக்குப் பங்கமும், உயிர் இழப்பும் ஏற்படும் என்று கூறுவதை என்னுல் நம்பமுடியவில்லை. இத் தகைய விஷயங்களில் எனக்கு நல்ல அனுபவம் உண்டு. ஆனுல் நிர்வாகத்தினரோ இதற்கு மாறான கருத்துக் கொண்டுள்ளார்கள். அவர் களுடைய கஷ்டத்தையும் நான் உணர்கிறேன். அவர்களுக்கு கிடைத்த தகவல்களை வைத்துத் தான் அவர்கள் செயல்படுவார்கள் என்பது நியாயமே. சட்டத்தை மதிக்கும் பிரஜையாகிய நான் முதலில் ஆர்டருக்கு கீழ்ப்படியத்தான் நினைத்தேன். ஆனுல் நான் அவ்வாறு செய்தால் யாருக்காக நான் இங்கு வந்தேனே, அந்தக் கடமைஉணர்விற்குப் பங்கம் விளைவித்தவன் ஆவேன். அவர்களுடன் தங்கியிருப்பதன் மூலமே அவர்களுக்கு நான் தொண்டு புரிய முடியும் என்று உணர்கிறேன். அதனுல் நானுகவே இதை விட்டு வெளியேறுவதற் கில்லை. இந்தக் கடமைச் சிக்கல்களிடையே அவர்களிடமிருந்து என்னைப் பிரிக்கும் பொறுப்பை நிர்வாகத்திடமே ஒப்படைக் கிறேன். என்னைப் போல இந்தியப் பொது வாழ்வில் இடம் பெற்றுள்ள ஒருவன் மற்றவர்

களுக்கு ஒரு முன்மாதிரியாக இருக்கவேண்டும். சிக்கல் நிறைந்த இந்தச் சட்டக்குழுவில் எதிர்ப்புத் தெரிவித்ததற்கான தண்டனையை எவ்வித மறுப்பின்றி ஏற்றுக் கொள்கிறேன். சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்துக்கொள் வதற்காக இவ்வாக்குமூலத்தை நான் தர வில்லை. சட்ட ரீதியாக மேலாளர்களுக்கு அவமரியாதை செய்யும் பொருட்டும் இதை மீறவில்லை. மனச்சாட்சி என்ற மனிதனின் மிக உயரிய சட்டத்திற்குத் தலை வணங்கு வதற்காகவே இவ்வாறு நடந்தேன்'' என்று முடித்தார்.

மாஜிஸ்திரேட்: நீங்கள் உங்கள் குற்றத்தை ஒப்புக்கொள்கிறீர்களா?

நுழைந்தவர்: நான் சொல்ல வேண்டியதை எல்லாம் என் வாக்குமூலத்தில் கூறி விட்டேனே?

மாஜிஸ்திரேட்: குற்றத்தை முழுமையாக ஒப்புக் கொண்டதாக அதில் காணேமே?

நுழைந்தவர்: மீண்டும் மீண்டும் இதே வினவை எழுப்புவதால் நான் கோர்ட்டாரின் நேரத்தை வீணுக்க விரும்பவில்லை. எனவே குற்றத்தை ஒப்புக்கொள்கிறேன்.

மாஜிஸ்திரேட்: மாவட்டத்தை விட்டு உடனே வெளியேறுவதோடு நான் இனிமேல் இங்கு வரமாட்டேன் என்று நீங்கள் உறுதிகூறினுல் உங்கள் மீதுள்ள வழக்கு வாபஸ் பெறப்படும்.

நுழைந்தவர்: அது முடியாத காரியம், இன்று மட்டுமல்ல. நான் சிறையிலிருந்து வெளி வந்ததும் சம்பாரணை என்னுடைய இருப்பிட மாக்க விருக்கிறேன்.

இதை எதிர்பாராத மாஜிஸ்திரேட்டும், அரசு வக்கீலும் அதிர்ச்சியுற்றனர். 3 மணிக்கு தீர்ப்பு கூறப்படும் என்றுசொல்லி மாஜிஸ்திரேட் வெளியேறிவிட்டார்.

இந்தப் பரபரப்பான நிகழ்ச்சியை கோர்ட்டில் ஏற்படுத்தியவர் நமது தேசப்பிதா காந்தியடிகளே.

தன் இருப்பிடத்திற்கு பகல் 1 மணிக்குப் புறப்பட்டார் காந்தி. இடையில் மாவட்டப் போலிஸ் அதிகாரி அவரைச் சந்தித்தார். அவரை தென் ஆப்பிரிக்காவிலேயே தனக்குத் தெரியும் என்று தன்னை அறிமுகப்படுத்திய அவர், தோட்ட முதலாளிகளை அவருடன் பேச ஏற்பாடு செய்வதாகக் கூறிச்சென்றூர்.

பின் கலெக்டர் ஹேகாக்கை அடிகள் சந்தித்த பொழுது அவருக்கு எதிராக நடவடிக்கை எடுத்ததற்கு மன்னிப்புக் கோரிஞர். தன்னை முன்கூட்டியே அடிகள் பார்த்திருக்க வேண்டும் என்றும் அபிப்பிராயப்பட்டார். கமிஷனரிடம் அவருக்கு கிடைத்த அனுபவங்களை காந்தி விளக்கினார். இறுதியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மூன்று நாட்களுக்கு கிராமங்களுக்குப் போகவேண்டாம் என்று கேட்டுக் கொண்டார். காந்தியும் அதற்கு ஒப்புக் கொண்டார்.

மூன்று மணிக்கு கோர்ட் மீண்டும் கூடிற்று. வந்ததும் வராததுமாக ஏப்ரல் 21ந்தேதி தீர்ப்பளிப்பதாக் கூறிஞர் மாஜிஸ்திரேட். மேலும் அவரை ரூ. 100/- ஜாமீனில் விடுவிப்பதாகச் சொன்னார். தனக்கு ஜாமீன் எடுக்க ஆள் இல்லை என்ரூர் காந்தி. "சொந்த

ஜாமீன் கொடுக்கலாம்'' என்றார் மாஜிஸ்திரேட். அதற்கும் மறுக்கவே ''சரி சரி 21ந்தேதி வாருங்கள்'' என்று கோர்ட்டைக் கலைத்து விட்டார் நீதிபதி.

ஏப்ரல் 20ஆம்நாள் இரவு 7 மணி இருக்கும். கவர்னர் அடிகள் மேல்இருந்த வழக்கை வாபஸ்பெற உத்தரவிட்டுள்ளார் என்ற செய்தி வந்தது.

மாவட்ட ஆட்சியாளரும் அடிகள் சுதந்திர மாய் தன்னுடைய விசாரணையை நடத்தலாம். எந்த நேரம் வந்தாலும் அவருடைய அலுவலகம் சகலவித ஒத்துழைப்பும் அவருக்குத் தரும் என்று எழுதி அனுப்பியிருந்தார்.

இந்த **ஏப்ரல்18ஆம் நாள்** தான் சம்பாரண் சத்தியாக்கிரகத்தில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. கோர்ட்டில் ஆயிரக்கணக்கில் கூடியிருந்த விவசாயிகள் 'காந்திக்கு ஜே' என்ற கோஷத்தை விண்ணதிர முழக்கினர். இதுவரை அவர்களைப் பிடித்திருந்த பய உணர்வு குறைய ஆரம்பித்தது. காந்தி யடிகளிடம் பூரண நம்பிக்கையும், மரியாதையும் பீகார் மக்களுக்கு ஏற்பட்டது. வெள்ளைக்காரத் தோட்ட முதலாளிகளிடையே அச்சமும் அதிர்ச் சியும் ஏற்பட்டன. அகில இந்தியாவும் தினமும் செய்தித் தாளில் சம்பாரண் பற்றிய விவரங் களுக்கு காத்திருந்தது. பொதுவாக அரசு ஊழியர்களின் பிடி தளர்ந்து, பொதுமக் களிடையே உற்சாகம் கரை புரண்டோடியது.

அத்தியாயம் 2
சம்பாரண் ஒரு விளக்கம்

பீகார் மாநிலத்தில் வடமேற்குப் பகுதியில் நேபாளத்தின் தெற்கில் அமைந்துள்ளது **சம்பாரண்** மாவட்டம். **கண்டக்** என்பது இங்குள்ள பெரிய நதி. இது முன்னொரு காலத்தில் சம்பாரண் மத்தியில் ஓடிக் கொண்டிருந்ததாம். ஆனால் திடீரென்று தன்னுடைய பாதையை மாற்றிக் கொண்டதாம். இது நடுவே ஓடினதற்கு அடையாளங்களாக இன்றும் 43 ஆழமான பெரிய ஏரிகள் இதன் ஓடின பாதையில் உள்ளன. குடிப்பதற்கு பயன்படாத இவற்றின் நீரை அவுரித் தோட்டங்களுக்குப் பாய்ச்சி பலன் அனுபவித்தனர் அப்பகுதியில்.

மோதி ஹரி, பெட்டையா என்ற இரண்டு நகரங்களையும், 2841 கிராமங்களையும் கொண்டது இம்மாவட்டம். இதில் வசித்த 20 லட்சம் மக்களுள் 98% பேர் கிராமங்களிலேயே வாழ்ந்தனர். இந்துக்கள் தான் இங்கு மெஜாரிட்டி மக்கள். ஹிந்தியின் ஒருவகையான **போஜ்புரியே** இவர்களின் தாய்மொழி.

சம்பாரண் பழங்காலத்தில் சம்பாரண்யா என்று அழைக்கப்பட்டது. இங்குள்ள அடர்ந்த காடுகளில் ரிஷிகள் தங்கள் தபோவனங்களை அமைத்து அமைதியான வாழ்க்கை நடத்தி வந்தனர். **பக்த துருவன்** இங்குதான் பிறந்து, துருவ நட்சத்திரம் ஆவதற்கு உதவின தவம் செய்து முக்தி பெற்றான். **ஜனக மகா முனிவர்** இப்பகுதியைத்தான் அக்காலத்தில் மிகுந்த

கீர்த்தியுடன் ஆண்டு வந்தார். லவகுசா பிறந்து வாழ்ந்த **வால்மீகி முனிவரின்** ஆசிரமும் இங்குதான் இருந்தது. கடைசித்தடவையாக **கௌதமபுத்தர்** சம்பாரண் வழியாகத் தான் குசினருக்குச் சென்றூர் என்று சரித்திரம் கூறுகிறது. அசோகத்தூண்கள் நான்கு அக் காலத்தில் இங்கு நடைபெற்ற பண்பாட்டு மாறுதலுக்குச் சின்னங்களாக இன்றும் இப் பகுதியில் நின்று கொண்டிருக்கின்றன. பழமை மிக்க இம்மண்ணேடு **லிச்சாவீஸ் குப்த வம்சா வளி மன்னர்களும், அசோகர், ஹர்ஷவர்த்தனர்** போன்ற சக்கரவர்த்திகளும் சம்பந்தப்பட்டிருந் தனர் என்பது சம்பாரண் மாவட்டத்திற்கு பெருமையளிக்கும் ஒரு விஷயம்.

ஆனல் இது 19, 20 ஆம் நூற்றுண்டுகளில் வெள்ளைத்தோட்ட முதலாளிகளின் கொள்ளை யடித்தலுக்கும், கொத்தடிமைத்தனத்திற்கும் இலக்கான பூமி ஆயிற்று. அவுரிச் சாயக்கறை படிந்து அகற்ற முடியாத நிலையில் தவித்தது. இவ்வாறு நூற்றுண்டுகள் நீடித்த அநீதியை மகாத்மாகாந்தி 1917ல் வந்து ஓராண்டில் இருந்த இடம் தெரியாமல் ஆக்கினர். இதையே நாம் **சம்பாரண் சத்தியாக்கிரகம்** என்று அழைக்கிறோம்.

அத்தியாயம் 3
ராஜ்குமார் சுக்லாவின் இடைவிடாத தூண்டுதல்

1916 டிசம்பரில் லக்னௌ காங்கிரஸ் நடைபெற்றது. அன்றைய இந்தியாவின் பெருந் தலைவர்கள் அங்கு கூடியிருந்தனர். பாலகங் காதர திலகர், அன்னிபெசண்ட அம்மையார், ஜின்னு, மாளவியா, சுரேந்திரநாத் பானர்ஜி இவர்களில் சிலர். காந்தியடிகளும் இதில் கலந்து கொண்டார். ஆனால் அவரைப்பற்றி அப்பொழுது பலருக்குத் தெரியாத காலம்.

ராஜ்குமார்சுக்லா ஒரு சாதாரண சம்பாரண் விவசாயி. அவுரித் தோட்ட முதலாளிகள் அவனைப் பெரும்பாடுபடுத்திவிட்டார்கள். லக்னௌ காங்கிரசில் அவுரித் தோட்ட முதலாளிகள் பண்ணும் அட்டூழியங்களை எடுத்துச்சொல்ல அவனும் ராஜேந்திரபிரசாத், பிரஜ்கிசோரி பிரசாத் போன்ற பீகார் தலைவர் களும் அங்கு வந்திருந்தனர். சுக்லா முதலில் திலகரையும் மாளவியாவையும் சந்தித்து விவசாயிகள் பட்டுக்கொண்டிருக்கும் அவதி களை விவரித்தான். அவர்களோ "இன்றைய உடனடிப் பிரச்னை அரசியல் விடுதலை. அதற்குப் பிறகுதான் மற்றவை" என்று கூறி விட்டார்கள். மனமுடைந்த சுக்லா பீகார் பிரதிநிதிகளின் அடுத்த கூடாரத்தில் தங்கி யிருந்த காந்தியடிகளைச் சந்தித்தான். ஏற்கனவே தென்னுப்பிரிக்காவில் இந்திய ஒப்பந்தக் கூலிகளுக்கு அவர் போராடியுள்ளார் என்பதை அவன் தெரிந்துவைத்திருந்தான்.

அடிகள் அவன் கூறினவற்றையெல்லாம் பொறுமையுடன் கேட்டார். அவை அனைத்தும் உண்மைதானா என்று தான் நேரில் தெரிந்து கொள்ளும் வரை இதில் இறங்கி வேலை செய்யமுடியாது என்று அவர் தெளிவுபடுத்தினார். ஆகவே அவனையே அம்மகாநாட்டில் சம்பாரண் அநீதிகளைப் பற்றிய தீர்மானத்தை நிறைவேற்றுமாறு கூறிவிட்டார். வேறு வழியின்றி பாபு பிரஜ்கிசோரி பிரசாத் முன்மொழிய, ராஜ்குமார் சுக்லா தீர்மானத்தை ஆதரித்துப் பேசினுன்.

பீகார் பிரதிநிதிகளிடையே காந்தியடிகள் தான் இக்காரியத்தை முடிக்க வல்லவர் என்ற எண்ணம் வலுத்துக்கொண்டிருந்தது. ராஜ்குமார்சுக்லா மீண்டும் அவரைச் சந்தித்து சம்பாரணுக்கு வந்துபோகுமாறு கேட்டுக் கொண்டான். மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்தில் அங்கு வந்துபோவதாக அடிகள் ஒப்புக் கொண்டார்.

லக்னௌ மகாநாட்டிலிருந்து அடிகள் **கான்பூர்** அடைந்தார். அங்கும் சுக்லா அவரைப் பின்தொடர்ந்தான். ''சம்பாரண் மிக அருகாமையில் உள்ளது. அங்கு ஒருநாள் வந்து நேரில் பாருங்கள்'' என்று தொந்தரவு செய்தான். தனக்கு சபர்மதி ஆசிரமத்தில் முக்கிய வேலை காத்துக்கொண்டிருக்கிறது. ஆகவே இன்று வரமுடியாது. எப்படியும் சம்பாரணுக்கு ஒரு நாள் வருகிறேன் என்று வாக்கு அளித்தார் காந்தி.

சபர்மதி வந்துசேர்ந்தார் காந்தி. ஆனல் சுக்லா நேரில் அங்கும்வந்து சம்பாரண் வரும்

நாளைக் குறிப்பிடுங்கள் என்று கேட்டான்.

"மார்ச் மாதத்தில் நான் கல்கத்தா வருவேன், அப்பொழுது என்னை உங்கள் ஊருக்கு அழைத்துச் செல்லுங்கள்", என்று பதிலிறுத்தார் காந்தி.

1917 பிப்ரவரி 27 அன்று விவசாயிகள் சார்பாக ராஜ்குமார்சுக்ளா அடிகளுக்கு ஒரு கடிதம் எழுதினுன். அதற்கு மார்ச் 7-ஆந்தேதி கல்கத்தாவில் தன்னைச் சந்திக்குமாறு பதில் எழுதினார் காந்தி. ஆனுல் இந்தக்கடிதம் மார்ச் 7-ஆம் தேதிதான் சுக்ளாவிற்கு கிடைத்தது. எனினும் அவசரமாக அங்கு ஓடிப்பார்த்தபோது காந்தி டெல்லிக்குப் போய் விட்டார் என்று தெரிந்தது. ஆகவே சம்பாரணுக்குத் திரும்பிப்போய் அடிகளுக்கு மீண்டும் ஒரு கடிதம் எழுதினான். வெகுசீக்கிரம் அங்கு வருவதாக மார்ச் 16-ஆம்நாள் பதில் கிடைத்தது. ஏப்ரல் 3 அன்று சுக்ளாவிற்கு தான் கல்கத்தாவில் **புபேந்திர நாத் பாசு** வீட்டில் தங்குவேன் என்று அடிகள் ஒரு தந்தி அடித்தார். காந்தி அங்கு சென்றபோது ராஜ்குமார் சுக்லா அவரை முன்வந்து வரவேற்ருன். ஆச்சரியத்தில் மூழ்கிய காந்தி சுக்லாவின் விடா முயற்சியையும், பிரச்னை யைத் தீர்ப்பதில் அவன் கொண்டிருந்த அக்கறையையும் பாராட்டும் வகையில் ஏப்ரல் 7-ஆம் தேதி கல்கத்தாவிலிருந்து சம்பாரணுக்கு சுக்லாவுடன் புறப்பட்டுச் சென்ருர். இருவரும் நல்ல கிராமப்புற வாசிகளாகத் தோற்ற மளித்தனர்.

அவுரிச்சாயப் பொட்டலத்தை காந்தி ஏற்கனவே பார்த்திருக்கிருர். ஆனால் அதன் பின் ஒளிந்திருந்த ரத்தம் தோய்ந்த வரலாறு அவருக்குத் தெரியாது. உண்மையைக் கூறு மிடத்து பீகாரின் பூகோளம் பற்றிய அறிவே அவருக்கு அப்பொழுது இருக்கவில்லை. இந் நிலையில் ஓரிரு நாட்களில் திரும்பி விடலாம் என்ற எண்ணத்துடனேயே ராஜ்குமார்சுக்லா வை நம்பி பீகார் பயணமானுர்.

அத்தியாயம் 4

எதிர்பாரா அனுபவங்கள்

ராஜ்குமார் சுக்லாவின் தோற்றத்தையும், தீவிரத்தையும் ஸ்வைத்து அவன் ஒரு செல் வாக்குடையவன் என்று முதலில் காந்தி நினைத்திருந்தார். ஆனால் ரயில்பயணத்தின் போது அவனைப்பற்றி ஓரளவு தெரிந்து கொண்டார்.

ஏப்ரல் 10 அன்று ரயில் பாட்ஞவை அடைந்தது. நேராக காந்தியை ராஜேந்திர பிரசாத் வீட்டிற்கு அழைத்துச் சென்ருன் சுக்லா. ஆனால் அவரோ பூரிக்குச் சென்றிருந் தார். அங்குள்ள அவருடைய வேலையாட்கள் காந்தியைச் சரியாக நடத்தவில்லை. அவரைத் திண்ணையில் உட்கார வைத்துவிட்டனர். சுக்லா அவரை வீட்டிற்குள் இருந்த கக்கூஸிற்கு அழைத்துச்சென்ருன். ஆனால் அங்கிருந்த வேலையாட்கள் அடிகளுக்கு வீட்டிற்கு முன்னுல் இருந்த கழிப்பறைக்கு வழிகாட்டினுர்கள். இது மட்டுமா? வேலையாட்கள் கிணற்றில் தண்ணீர்

இறைக்கும் போது காந்தி வாளியைப் பயன் படுத்த தடை விதித்தனர். அடிகளுக்கு இது ஒரு புதுஅனுபவமாக இல்லாவிட்டாலும், ராஜேந்திரப்பிரசாத் இல்லத்திலும் இத்தகைய தீண்டாமையா என்று அவரை நினைக்க வைத்தது. மேலும் ராஜ்குமார்சுக்லா ஒரு சாதாரணக் கிராம விவசாயியே. இனிமேல் தன்னுடைய காரியத்திற்கு அவனை நம்பிப் பயனில்லை என்று முடிவுகட்டினார்.

திடீரென்று லண்டனில் தன்னுடன் பார் அட்லா படித்த மஜாருல் ஹக் நினைவு வந்தது. அவருக்கு தான் ராஜன்பாபு வீட்டில் இருக்கும் தகவல் கொடுத்ததும், அவரே தன்னுடைய காரில் வந்து அங்கு அவரைச்சந்தித்தார். தன் பங்களாவில் தங்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். ஆனால் காந்தியோ வந்த காரியத்தை முடிப்பதற்கு வழி சொல்லுங்கள் என்றார். அவர்கள் இருவரும் பின்னர் பேசி முடித்தபடி அடிகள் முஜாபர்பூர் அன்றே செல்லத்தயாரானார். மஜாருல்ஹக் ஆச்சார்யா கிருபளானிக்கு காந்தி வருகைபற்றித் தந்தி கொடுத்தார். பாட்னா ரயில்நிலையத்திற்கு வந்து அடிகளை வழியனுப்பியும் வைத்தார்.

ஏப்ரல் 10 நள்ளிரவில் காந்தி முஜாபர்பூர் வந்துசேர்ந்தார். அங்குள்ள கல்லூரியில் பேராசிரியராக இருந்து தன் வேலையை ராஜினமாச் செய்திருந்த கிருபளானி அவர்கள் தன்னுடைய மாணவர்களுடன் காந்திக்கு வரவேற்பு அளிப்பதற்காகக் காத்துக்கொண் டிருந்தார். அடிகளோடு கடிதத்தொடர்பு கொண்டிருந்தாரே ஒழிய அவரை நேரில்

அவர் பார்த்ததில்லை. எனவே பயணிகளிடையே அவரைத் தேடிக்கொண்டிருந்த வேளையில் விவசாயி போல் தோற்றமளித்த காந்தியை ராஜ்குமார்சுக்லா மிகப்பெருமையுடன் கூட்டத்தினர்க்கு அறிமுகப்படுத்தினுன். ''காந்திக்கு ஜே'' என்ற கோஷம் நள்ளிரவில் ரயில் நிலையத்தை அதிர வைத்தது. தாங்கள் கொண்டு வந்திருந்த கிளியாஞ்சட்டி விளக்குகளைக் கொண்டு கல்லூரி மாணவர்கள் காந்திக்கு ஒரு வீர வரவேற்பு அளித்தனர். மேலும் அவர் சென்ற வாகனத்தை மாணவர்களே இழுத்துச்சென்றனர். அரசு உத்தியோகத்தை ராஜினுமா செய்த ஆச்சார்யா கிருபளானிக்கு அங்கு வீடு கிடையாது. அவர் தனது நண்பர் **பேராசிரியர் மல்கானி** வீட்டில் தான் தங்கியிருந்தார். எனவே அடிகளும் அன்றிரவை அவ்வீட்டிலேயே கிருபளானியுடன் கழித்தார். அரசு ஊழியர் ஒருவர் காந்தியைப் போன்ற புரட்சிக்காரர்களுக்கு தங்குவதற்கு இடம் அளித்தல் அந்தக்காலத்தில் நினைக்க முடியாத ஒன்று.

அத்தியாயம் 5
விவசாயிகளின் அல்லல்கள்

அன்று இரவு திர்குட் டிவிஷனைச் சேர்ந்த சம்பாரண் மாவட்டத்தில் விவசாயிகளின் அவல நிலையை கிருபளானி அடிகளுக்கு விளக்கமாய் எடுத்துரைத்தார். சம்பாரண் விவசாயிகளுக்கு அப்படி என்ன கஷ்டங்கள் இருந்தன என்று தெரிந்து கொள்ள நீங்கள் ஆசைப்படுவது என்க்குப்புரிகிறது. இதோ தருகிறேன்.

கிழக்கு இந்தியக் கம்பெனி ஒரு வியாபாரக் கம்பெனி என்பது நமக்குத் தெரியும். அவர்கள் முதலில் மேற்கிந்தியத் தீவுகளில் அவுரி பயிரிட்டு லாபம் சம்பாதித்தனர். ஆனால் அங்குள்ள மக்களுக்கு வேறு பணப்பயிர்களில் நாட்டம் இருந்ததால் இதை விட்டு விட்டார் கள். ஆகவே கம்பெனியார் இந்தியாவில் இதைக் கொண்டுவந்தார்கள். இங்கு குடியேறிய வெள்ளைக்காரர்கள் அவர்களிடம் பணம் பெற்று அவுரி பயிரிட்டு அவர்களுக்கு அனுப்பி வைத்தார்கள். இவர்கள் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள். எனவே சர்க்கார் உத்தியோகஸ் தர்களின் உதவி கொண்டு நிலங்கள் பெற்றார் கள். உள்ளூர்காரர்களிடம் குத்தகைக்கு நிலம் பெற்று அதில் அவுரி பயிர்செய்து லாபம் சம்பாதித்து வந்தார்கள்.

திர்குட் டிவிசன் கலெக்டராயிருந்த **பிரான் கோயிஸ் கிராண்ட்** (1782-85) பீஹாரில் அவுரிச் சாகுபடிக்கு முதன்முதலில் ஏற்பாடு செய்தார். ஐரோப்பிய முறைப்படி சம்பாரணில் இது 30 ஆண்டுகள் கழித்து பயிரிடப்பட்டது. 1850-ஆம் ஆண்டில் அவுரிக்கு அதிக விலை கிடைத்ததால் வெள்ளைக்காரத் தோட்ட முதலாளிகள் சீனி உற்பத்தியை விட்டுவிட்டு அந்த நிலங்களில் அவுரிச் சாகுபடி செய்ய மக்களைத்தூண்டினர். தங்களுக்கு நிரந்தரக் குத்தகைக்கு விடப்பட்ட நிலங்களில் தங்கள் சொந்தச் செலவில் கூலி ஆட்களைக்கொண்டு அவுரி பயிரிட்டு முதலாளிகள் அதிக வருவாய் பெற்றனர். இந்த முறைக்கு **ஜெரெய்த் முறை** என்று பெயர். நிலத்தில் வேலைசெய்யும்

பீகாரிகள் தங்கள் ஏர்களையும், மாடுகளையும் முதலாளிகளுக்கு கொடுத்து உதவ வேண்டும்.

அசாமிவார் என்ற மற்றொரு முறை அங்கு புழக்கத்தில் இருந்து வந்தது. நிலச்சொந்தக் காரர்கள் முதலாளிகளுடன் எழுத்துமூலம் **சட்டாஸ்** என்ற ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும். அதன்படி அவர்கள் நிலத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் அவுரி பயிரிடுவதற்கு முன்பணம் பெற்றுக்கொள்ள வேண்டும். விதையை மட்டும் முதலாளிகள் சப்ளை செய்வர். மீதியுள்ள அனைத்துச் செலவுகளும் விவசாயியைப் பொருத்ததே. விளைச்சலை அறுத்து எடுத்துக்கொள்வது முதலாளியின் பொறுப்பு. ஒரு பிகா(ஏக்கர்)வின் உற்பத்திக்கு இத்தனை ரூபாய் என்று முதலாளி கொடுத்து விடுவான். ஒப்பந்தப்படி அவுரி கொடுக்கா விட்டால் முதலாளி விதிக்கும் அபராதத் தொகையையும் விவசாயி செலுத்தவேண்டும். தங்களுடைய நிலத்தில் இருபதில் மூன்று பங்கில் (3/20) அவசியம் அவுரிச் சாகுபடி செய்யவேண்டும் என்ற இந்த முறையைத்தான் **தீன் கதியா** முறை என்று அழைக்கிறோம். ஒப்பந்தப் பத்திரத்தில் 20 அல்லது 30 ஆண்டுகளுக்கு குத்தகை எழுதிக் கொடுக்க வேண்டும். இந்த முறைதான் விவசாயிகளுக்குப் பெரும்பாரமாய் இருந்ததோடு அவர்களைக் கொத்தடிமைகளாகவும் ஆக்கிவிட்டது.

இந்த அவுரிச் சாகுபடி ஒப்பந்தத்தைக் காரணமாய் வைத்துக்கொண்டு தோட்ட முதலாளிகளும் அவர்களுடைய கையாட்களும் விவசாயிகளைக் கசக்கிப்பிழிந்தனர். உரம்

அதிகமுள்ள நிலப்பகுதிகளில் தீன்கதியா முறையைப் பின்பற்ற விவசாயிகளை வற்புறுத்தினர். தவறினுல் அடி, உதை, வீட்டிற்குத் தீ வைப்பு, ஏர், கலப்பைகள் பறிமுதல், பொய் வழக்குககள், சிறைத் தண்டனைகள் என்பன போன்ற பல தொந்தரவுகளை அவர்கள் சதா அனுபவிக்க நேரிட்டது. ஜெர்மன் செயற்கைச் சாயம் வந்தபோதும், அவுரிக்கு விலைகள் குறைந்தபோதும் தோட்ட முதலாளிகள் அவுரி பயிரிடுவதைக் குறைத்துவிட்டனர். அப்பொழுது விவசாயிகளை தீன் கதியா முறையிலிருந்து விடுவிப்பதாகக் கூறி ஏற்கனவே ஒத்துக்கொண்ட வரியோடு ஷாராபெஷ் என்ற முறையில் குத்தகைப் பணத்தில் 60% வரை வசூலித்தனர். அவர்கள் தண்ணீர் பாய்ச்சுவதற்கு வரி விதித்தனர். இவற்றிற்கும் மேலாக முதலாளியின் சிப்பந்திகள் இடைத்தரகர்களாகி ஏக்கருக்கு இவ்வளவு கூலி என்று நிர்ணயித்த தொகையில் பங்குவேறு எடுத்துக்கொண்டனர். இவ்வாறு தன்மானமிழந்து, கிடைக்க வேண்டிய அற்பக்கூலியையும் இழந்து சம்பாரண் விவசாயிகள் அல்லோல கல்லோலப்பட்டனர்.

தங்களுடைய குறைகளை ஆங்கில அதிகாரிகளுக்கு பலமுறை விவசாயிகள் மனுக்கள் மூலம் தெரிவித்தனர். நேரிடையாகவும் அவர்களைச் சந்தித்து முறையிட்டனர். தோட்ட முதலாளிகள் வெள்ளைக்காரர்கள் ஆனதினாலும், அவர்கள் ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் ஆதலாலும், விவசாயிகளுக்கு நியாயம் கிடைக்கவில்லை. தோட்ட முதலாளிகள் சங்கம் மிகச்சக்தி வாய்ந்ததாகவும் மேலிடத்தோடு

தொடர்பு கொண்டதாகவும் இருந்தது. கண் துடைப்பிற்காக அவ்வப்போது விசாரணை நடக்கும். முதலாளிகளுக்குச் சாதகமாகத் தீர்ப்பு அளிக்கப்படும். அதனால் 1907, 1911ஆம் ஆண்டுகளில் பல கைகலப்புச் சம்பவங்கள் நடந்தன. இவற்றில் தலைமை வகித்த விவசாயிகளுக்கும் ஏனையோர்க்கும் தண்டனைகள் விதிக்கப்பட்டன. சில வசதியுள்ள விவசாயிகள் மட்டும் பீகாரிலுள்ள **பிரஜ்கிசோரி பிரசாத், ராஜேந்திர பிரசாத்** போன்ற வக்கீல் பாபுக்களைக் கொண்டு உயர்நீதிமன்றங்கள் வரை சென்று தங்கள் வழக்குகளில் வெற்றி பெற்றதும் உண்டு. **சர் ஆஷ்லி ஈடன்** கவர்னராய் இருந்தபோது தோட்டமுதலாளிகள் செய்யும் அக்கிரமங்களை அவ்வப்போது கண்டித்து வந்தார். 1908ல் விவசாய இயக்குநராய் இருந்த **கௌர்வே** என்ற ஆங்கிலேயர் தன்னுடைய அறிக்கையில் விவசாயிகள் அனுபவிக்கும் கஷ்டங்களைக் குறிப்பிட்டிருந்தார். 1911ல் ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தி நேபாளத்திலிருந்து பீகார் வழியாகத் திரும்பினபொழுது 15000 விவசாயிகள் உரத்த குரலில் தங்கள் இன்னல்களைக் குறிப்பிட்டு, கத்தினபோது அவரை வாழ்த்துகிறார்கள் என்று அருகில் இருந்தவர்கள் அவரிடம் கூறிவிட்டனர்! பின்னர் கல்கத்தாவில் சக்கரவர்த்தியிடம் மகஜர் கொடுக்கப்பட்டது. அதில் கூறப்பட்டதை நிவர்த்தி செய்யுமாறு மன்னர் அதிகாரிகளிடம் அதைக் கொடுத்துச்சென்றார். இவர்களோ சரியான வழியில் அனுப்பப்படவில்லை என்று விவசாய

சங்கத்திற்கே அதைத் திருப்பி விட்டனர். இவ்வாறு கொதித்துக் கொண்டிருந்த வேளையில்தான் ராஜ்குமார்சுக்லா லக்னௌ காங்கிரஸில் நிலைமையை எடுத்துக்கூறச் சென்றான். அங்கு அடிகளை இணங்க வைத்து சம்பாரணுக்கு அவரைக் கூட்டி வருவதில் வெற்றியும் பெற்றான்.

அத்தியாயம் 6

வக்கீல் பாபுகளுடன் தொடர்பு

அடிகள் **மல்கானி** வீட்டில் இருந்தபோது சில வக்கீல்கள் அவரை வந்து சந்தித்தனர். அவர்களில் **ராம் நவமி பிரசாத்** என்பவர் அடிகள் **கயா பாபு** வீட்டிற்கு மாறினால் தான் வந்தகாரியத்தைச் செவ்வனே செய்து முடிக்க முடியும் என்று எடுத்துரைத்தார். கயாபாபுவும் வற்புறுத்தவே தன்னுடைய இருப்பிடத்தை பேராசிரியர் மல்கானி வீட்டிலிருந்து கயாபாபு வீட்டிற்கு அடிகள் மாற்றி விட்டார். அங்கு **பிரஜ்கிசோரி பாபு** தர்பங்காவிலிருந்தும், **ராஜேந்திர பிரசாத்** பூரியிலிருந்தும் திரும்பி வந்து காந்தியடிகளைச் சந்தித்தனர். பிரஜ்கிசோரி பாபு பீகாரிகளுக்கே உரிய பணிவு, எளிமை, நல்லதன்மை, அளவற்ற நம்பிக்கையுடன் அவருக்கு காட்சியளித்தார். அவர்களோடு தொடர்பு வைத்துக்கொள்வதில் காந்திக்கு அலாதிபிரியம் ஏற்பட்டது.

பிரஜ்கிசோரி பாபு விவசாயிகளின் சார்பில் பலதடவை கோர்ட்டில் ஆஜராகி அவர்களுடைய வழக்குகளுக்குத் தீர்வுகண்டவர். அதனால் அவர்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்

தார். காந்தியடிகள் அவரிடம் வழக்கிற்குப் பணம் வாங்குவது உண்டா என்று கேட்டார். ரூ. 5000/- முதல் ரூ. 10,000/- வரை பணம் வாங்கிக்கொண்டுதான் வக்கீல்கள் வாதாடியுள்ளார்கள் என்ற விவரமும் தெரியவந்தது. இதை எப்படி அவர்கள் சேவைசெய்வதாகக் கூறினார்கள் என்பது அவருக்கு ஒரு புதிரா யிருந்தது. இதை அவர்களுக்கு மனம் கோணுமல் சுட்டியும் காட்டிவிட்டார்.

''அச்சமே உருவாகியுள்ள விவசாயிகளுக்கு கோர்ட்டுக்குப் போவதால் எந்த லாபமும் கிடையாது. முதலில் அவர்களிடம் படிந்துள்ள பயத்தைப் போக்கவேண்டும். தீன் கதியா முறையை அடியோடு ஒழிக்க வேண்டும். நான் இரண்டு நாட்கள் தங்கத்தான் இங்கு வந்தேன். ஆனால் நிலைமையைப் பார்க்கும்போது இரண்டு ஆண்டுகள்கூட இருக்க வேண்டிவரும்போல் தெரிகிறது. இப்பொழுது என் கடமையென்ன வென்று புரிந்து கொண்டேன். இதைச் சாதிக்க உங்கள் உதவி தேவை'' என்று காந்திஜி கூறினார்.

''எங்களிடம் எத்தகைய உதவியை எதிர் பார்க்கிறீர்கள்?'' என்று வக்கீல் பாபுக்களின் சார்பில் பிரஜ்கிசோரி பாபு கேட்டார்.

''உங்களுடைய சட்ட அறிவு எனக்குப் பயன்படாது. சாதாரண விவசாயி பேசுகிற போஜ்புரி எனக்குப் புரியவில்லை. கெய்தி அல்லது உருது மொழியில் வரும் கடிதங் களையும் நான் படித்து அறிந்துகொள்வதற் கில்லை. ஆகவே நீங்கள் விவசாயிகள் கூறும் வாக்கு மூலத்தை எனக்குப் புரிய வைக்க

வேண்டும். அதாவது எனக்கு குமாஸ்தா வேலை செய்யவேண்டும். இதற்குப் பல மாதங்கள் ஆகலாம். நீங்கள் உங்கள் வக்கீல் வேலையை விட்டுவிட்டு எத்துணை நாட்கள் எனக்காகச் செலவழிக்க முடியும் என்பதை நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும். இவை அனைத்தையும் அனுதாப உணர்வுடன் பணம் பெறுமல் நீங்கள் செய்யவேண்டும். இந்தப் பணியைச் செய்வதன்மூலம் சிறைக்குப் போகவும் தயாராய் இருக்க வேண்டும்,'' என்று கூறி முடித்தார்.

ஆகவே பிரஜ்கிசோரி பாபு தன்னுடைய சக வக்கீல்களிடம் கலந்து ஆலோசித்து அவர்களுடைய முடிவை அடிகளுக்கு அறிவித்தார். யார்யார் முழுமையாக இதில் ஈடுபடுவார்கள், யார்யார் எவ்வளவு நேரம் இந்தச் சேவைக்கு ஒதுக்க முடியும் என்பதை திட்டவட்டமாக அவர் அறிவித்து விட்டார். ஆயிரக்கணக்கான விவசாயிகளின் வாக்கு மூலங்களை வாங்குமுன்,தோட்ட முதலாளிகள் சங்கத்தின் செயலாளரையும், திர்குட் டிவிசன் கமிஷனரையும் கண்டு பேசி அவர்களின் அபிப்பிராயங்களையும் அறிந்துகொள்வது அவசியம் எனத் திட்டமிட்டார் காந்தி.

அத்தியாயம் 7

கசப்பான ஆரம்ப அனுபவங்கள்

ஏப்ரல் 11 அன்று தோட்ட முதலாளிகள் சங்கச் செயலாளர் திரு. ஜே. எம். வில்சனைச் சந்தித்து அளவளாவினர் அடிகள். அவனே முதலாளிகளுக்கும் விவசாயிகளுக்கும் இடை

யில் மூன்றும் மனிதர் வரத்தேவையில்லை. அப்படி ஏதாவது சொல்ல வேண்டும் எனில் எழுத்தில் தரலாம் என்று அடித்துப் பேசினுன். காந்திஜி தான் ஒரு வெளி ஆள் அல்ல, மக்கள் விரும்பும் போது அவர்களுக்காக உண்மை நிலைமை பற்றி விசாரிக்க அவருக்கு முழு உரிமையுண்டு என்பதை வலியுறுத்தி விட்டு வெளியேறினுர்.

இரண்டு நாட்கள் கழித்து அந்த டிவிசன் கமிஷனராயிருந்த திரு. எல்.எப். மோர்ஸ் ஹெட் என்பவரைச் சந்தித்தார். அவனே ''ஏற்கனவே இது விஷயமாக அரசு விசாரணை செய்துவரும் சமயத்தில் அவருக்கு எந்த வழியிலும் உதவ முடியாது. யார் உங்களை இங்கு கொண்டுவந்தது? உங்களுக்கும் இதற்கும் எந்தவிதச் சம்பந்தமுமில்லை'' என்று அதிகார தோரணையுடன் சொல்லிவிட்டான். ஆனல் மனந்தளராத காந்தி கமிஷனரிடம் லக்னௌ காங்கிரசிற்கு வந்த பீகார் பிரதிநிதிகளின் வேண்டுகோளுக்கிணங்கவேதான் அங்கு வந்துள்ளதை ஆதியோடந்தமாய் எடுத்துச்சொல்லி தான் மக்களின் உண்மையான பிரதிநிதி என்பதை அவனுக்கு அறிவுறுத்தியபின் வெளியே வந்தார்.

தனது சகாக்களுடன் தன்னுடைய அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டார் காந்தி. தன்னுடைய விசாரணை நடைபெருது அரசு வெகு சீக்கிரம் அவரைச் சிறையில் தள்ளலாம். அதற்குள் மோதிஹரி அல்லது பெட்டையாப் பகுதிக்குள் தான் போய்விட வேண்டும் என்பதை அவர்களிடம் விளக்கினுர். இவ்

வாறிருக்க காந்தி சம்பாரணுக்கு வந்து விட்டார் என்ற செய்தி காட்டுத் தீயென எல்லா இடங்களுக்கும் தெரிந்து விட்டது. அதனால் விவசாயிகள் அவரிடம் தாங்கள் பட்ட கஷ்டங்களை விவரித்துச் சொல்ல கட்டுச் சோறு கட்டிக்கொண்டு கூட்டம் கூட்டமாய் வர ஆரம்பித்துவிட்டனர். அவர்கள் சொன்ன வற்றை நிதானமாய்க் கேட்டு வந்த காந்திக்கு ''இப்படியெல்லாம் நடந்திருக்குமா?'' என்ற ஐயப்பாடு இடையிடையே உண்டாயிற்று. லக்னௌ காங்கிரசுக்கு வந்த பீகார் பிரதிநிதி களிடமிருந்து தாங்கள்தான் 1916ல் அவரை சம்பாரண் அநீதிகளை விசாரிக்க வருமாறு கேட்டுக்கொண்டோம் என்ற மனுவைப் பெற்றார். இத்துடன் இங்குள்ள உண்மை நிலையை அறியவே தான் சாம்பாரணுக்கு வந்துள்ளார் என்றும் இதை மரியாதையுடனும் அமைதியுடனும் செய்துமுடிக்க விரும்புகிறார் என்றும் எழுதி, அந்தக் கடிதத்தையும் இணைத்து கமிஷனருக்கு அனுப்பி வைத்தார்.

அத்தியாயம் 8

ஏப்ரல் 14 அன்று சம்பாரணுக்குள் மறு நாளே நுழைந்துவிடத் தீர்மானித்தார். அதற்கு முன்னோடியாக அன்று மாலையே அருகிலிருந்த ஒரு கிராமத்திற்குப் போய் குடிசைகளுக்குள் நுழைந்து அவர்கள் எவ்வாறு வாழ்க்கை நடத்துகிறார்கள் என்பதை நேரடியாக அவர் களிடம் கேட்டுத் தெரிந்தார். அன்று இரவு தன்னுடைய சகாக்களிடம் கிராமமக்களின்

வறுமை நிலையைப் படம்பிடித்துக் காட்டினார். மேலும் தென்னாப்பிரிக்காவில் தான் சத்தியாக்கிரகம் செய்தபோது எப்படி ஒரு ஜாபிதா தயார் செய்து அதன்படி ஒருவர் கைதானவுடன் மற்றொருவர் அதைத் தொடர்ந்து நடத்திவந்தார் என்ற விவரங்களையும் எடுத்துரைத்தார்.

திட்டமிட்டபடி ஏப்ரல் 15 ஆம் நாள் மதிய ரயிலில் அவர் **மோதிஹாரி** புறப்பட்டார். அவருடன் **பாபு தரணீதரும், பாபு ராமநவமி பிரசாத்தும்** சென்றனர். காந்தி எந்த நேரத்திலும் தனக்கு கைது வாரண்ட் வரலாம் என்று எதிர்பார்த்தபடியால் குறைந்த அளவு சாமான்களே தன்னிடம் வைத்திருந்தார். பகல் 3 மணிக்கு மோதிஹாரி வந்தடைந்தார். வக்கீல் **கோரக் பிரசாத்** பங்களாவில் தங்கிவிட்டார். அருகிலுள்ள **ஜசௌளிபட்டி** கிராமத்தில் ஒரு விவசாயியை நையப்புடைத்து, அவனுடைய சொத்துக்களும் நாசமாக்கப்பட்டன என்று அவருக்கு உடனே தெரிய வந்தது. ஆகவே மறுநாள் காலை அங்கு போவது என்று உறுதியாயிற்று.

சம்பாரண் மாவட்டத்தில் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்லுவதற்கு யானைகள் தான் பயன்படுத்தப்பட்டன. முதன்முறையாக காந்தி மறுநாள் காலையில் தன்னுடைய மொழிபெயர்ப்பாளர் தரணீதர் பிரசாத்துடன் யானை மேல் சவாரி செய்து போய்க் கொண்டிருந்தார். கோடை காலமானதால் தூசி படிந்த அனல்காற்றையும் சகித்துக் கொண்டு அவருடன் பேசிக்கொண்டே மதியத்திற்குள் ஒன்பது மைல் கடந்து **சந்திராஹியா**

என்ற கிராமத்தை அடைந்தார். மோதிஹரி தொழிற்சாலையைச் சேர்ந்த ஊர் அது என்பதால் அங்கு இறங்கி அதன் நிலையைப் பார்க்க வேண்டுமென்று காந்தி விரும்பினார். பெரும்பாலானவர்கள் வேலைகளுக்குச் சென்று விட்டனர். ஒரே ஓர் ஆள்மட்டும் அங்கு காணப்பட்டான். அவனுடன் உரையாடும் போது கலெக்டரே இங்குள்ள தொழிற்சாலை மானேஜரை ஒன்றும் செய்யமுடியாது என்று கூறிக்கொண்டிருந்தான். ஒரு சைக்கிளில் சாதாரண உடையணிந்த ஒரு போலிஸ் சப் இன்ஸ்பெக்டர் காந்தியை நெருங்கி ''எங்களுடைய மாவட்டப் போலீஸ் அதிகாரி தன்னுடைய சலாம்களை உங்களுக்குத் தெரிவிக்கச் சொன்னார்'', என்றான். விஷயத்தைப் புரிந்து கொண்ட காந்தி தரணீதர் பாபுவைப் பார்த்து ''நீங்கள் வந்த விஷயத்தை ஜசௌளிப் பட்டியில் முடித்து விடுங்கள்'', என்று கூறி விட்டு அவருக்காக வாடகைக்கு வந்த ஒரு மாட்டுவண்டிக்குள் சப் இன்ஸ்பெக்டருடன் ஏறிச்சென்று கொண்டிருந்தார். போகும் வழியில் அவர்கள் எக்கா(திறந்த ஜட்கா வண்டி)விற்கு மாறினார்கள். சிறிது தூரம் சென்றதும் உதவி சூபரிண்டெண்ட் ஒரு இரட்டைக் குதிரை வண்டியில் வந்தார். காந்தியை அதற்குள் ஏறி வரச்செய்து வண்டி ஓடிக்கொண்டிருந்தது. திடீரென்று வண்டி நிறுத்தப்பட்டதும் காந்திக்கு ஒரு நோட்டீசைக் காண்பித்தார். மாவட்ட மாஜிஸ்திரேட் ஏப்ரல் 16 என்ற தேதியிட்ட அந்த நோட்டீசில் கையெழுத்திட்டிருந்தார். அதன் முகவரியில்

''தற்பொழுது மோதிஹரியில் உள்ள எம். கே. காந்திக்கு'' என்றிருந்தது. அதில் ''நீங்கள் இங்கிருப்பதால் அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டு உயிரிழப்புகளும் நேரிடலாம் என்று நான் நம்புவதால் கிடைக்கும் அடுத்த ரயிலில் இந்த மாவட்டத்தை விட்டு வெளியேறி விட வேண்டும்'', என்ற வாசகம் காணப்பட்டது. இந்த நோட்டீஸைப் பெற்றுக் கொண்டதற்கு ஒப்புதல் கடிதம் கேட்ட பொழுது ''என்னுடைய விசாரணை முடியும்வரை நான் சம்பாரணை விட்டு வெளியேறப் போவதில்லை'' என்று காந்தி காரணங்களுடன் எழுதி அதில் கையெழுத்திட்டார். பண்டித மாளவியா, மஜாருல் ஹக் போன்ற இந்தியத் தலைவர்களுக்கு சம்பாரணில் அன்று நடந்தவற்றை தந்தி மூலம் அறிவித்தார் காந்தி. **தீனபந்து ஆண்ட்ரூஸ்** உடனே அங்கு வந்துசேர வேண்டும் என்று தந்தியடித்தார். அன்று இரவு முழுவதும் விழித்திருந்து பல கடிதங்கள் எழுதினர். விரிவான செயல்திட்டம் ஒன்றைத் தயாரித்து அதை எவ்வாறு அவர் சிறைக்குச் சென்றதும் தொடர்ந்து நடத்தவேண்டும் என்பதை பிரஜ்கிசோரி பிரசாத்திற்கு ஆலோசனை கூறியிருந்தார்.

மறுநாள் அவர் கோர்ட்டில் எவ்வாறு விசாரிக்கப்பட்டார், எவ்வாறு பின் விடுவிக்கப் பட்டார் என்ற விவரங்களை நாம் முதல் அத்தியாத்திலேயே படித்து அறிந்துள்ளோம் அல்லவா?

அத்தியாயம் 9

வாக்கு மூலங்கள் சேகரித்தல்

கோரக் பாபுவின் பங்களாவில் தொடர்ந்து அடிகள் இருக்க முடியவில்லை. தினமும் நூற்றுக்கணக்கான விவசாயிகள் அவரைத் தேடிவந்தனர். அவர்களைக் கொள்ளும் அளவிற்கு அந்தப் பங்களா இல்லை. மேலும் அந்தச் சமயத்தில் வேறுயாரும் தங்களுடைய வீடுகளை காந்தியடிகளுக்கு வாடகைக்குத் தர முன்வரவில்லை. காரணம் சர்க்காரின் கெடு பிடி. இத்தருணத்தில் பிரஜ்கிசோரி பாபு மிகச் சாமர்த்தியமாய் திறந்தவெளி அதிகமுள்ள ஓரிடத்தை அமர்த்தி வாக்குமூலம் வாங்குவதற்கு ஒத்துழைத்தார். ஆகவே இந்தக் குழுவினர் அந்த ஹஜாரிமால் தர்மசாலைக்குள் குடியேறி விட்டனர்.

காந்திமுகாமிட்டிருந்த ஹஜாரிமால் தர்மசாலை

வாக்குமூலம் வாங்குவது எளிதான காரிய மல்ல. விவசாயிகள் பொதுவாக கண், மூக்கு வைத்து, சிறியதையும் பெரிதாகக் கூறி விடுவார்கள். ஆகவே அவர்கள் கூற்றில் எது உண்மையென்று குறுக்கு விசாரணைமூலம் அறிந்த பின்னரே அதை எழுத்தில் வடிக்க வேண்டும். இவ்வாறு செய்வதற்குப் பல மாதங்கள் பிடிக்கும். இதில் ஈடுபட்டவர்களுககு அதுவரை சகல வசதிகளும் கொடுக்கவேண்டும். இதற்குப் பணம் தேவைப்படும். இதை யாரிட மிருந்து பெறுவது? இந்தப் பிரச்னையை காந்தி வெகு எளிதில் சமாளித்துவிட்டார். **ஏழை விவசாயிகளிடமிருந்து ஒரு சல்லிகூட வாங்கு வதில்லை** என்று முடிவுகட்டினர். வக்கீல் பாபுக்கள் விவசாயிகளின் வழக்குகளுக்குப் பணம் வாங்கினவர்கள். அவர்களில் சிலர் தங்களால் ஆனதை அன்பளிப்பாய் ஈந்தார்கள். பொது வேண்டுகோள் விடுத்தால் இந்தியா முழுவதிலுமிருந்து பணம் குவிந்துவிடும். அதனுல் இது **அகில இந்திய** அளவில் **அரசியல் பிரச்னையாகி விடும்.** இதை அவ்வாறு ஆக்குவதற்கு காந்தி தயாராயில்லை. இதனுல் அல்லவா பம்பாய் நண்பர்கள் அனுப்பிய ரூ. 15,000/-ஐ காந்தி நன்றியுடன் திருப்பி அனுப்பிவிட்டார். பிரஜ்கிசோரி பிரசாத்தும் அவருடைய பீகாரிலுள்ள ஆதரவாளர்களும் தரும் பணத்தையும், ரங்கூனிலுள்ள அடிகளின் நண்பர் **டாக்டர் பி. ஜே. மேத்தா** அனுப்பும் தொகையையும் கொண்டு சமாளித்துவிட காந்தி திட்டமிட்டார். இவ்வாறு பணம் ஒரு பிரச்னையில்லாமல் ஆகிவிட்டது. உண்மை

யைச் சொல்லுமிடத்து ஓராண்டு நீடித்த இந்தச் சத்தியாக்கிரகத்திற்கு **மூவாயிரம் ரூபாய்க்கு** மேல் செலவாகவில்லை. வசூலில் நூற்றுக்கணக்கான ரூபாய் மிச்சப்பட்டு விட்டது என்று அடிகள் இதுபற்றி தன்னுடைய சத்திய சோதனையில் கூறி யுள்ளார்.

விசாரணைக்கு ஒத்துழைக்க முன்வந்த வக்கீல்கள் விசித்திரமான பழக்கங்கள் உடையவர்கள். ஆரம்பக் காலத்தில் ஒவ்வொருவரும் ஒரு சமையற்காரன், ஓர் உதவியாள் என்று கூட்டி வந்துவிட்டனர். இவர்கள் இரவில் நெடுநேரம் கழித்து உணவு அருந்திவந்தார்கள். இதனால் அதிகமான செலவுகள் ஆனதோடு குறித்த நேரத்தில் இவர்கள் பணிக்கு வர முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. இவற்றை அடிகள் அடிக்கடி இடித்துக் கூறினார். இறுதியில் இவர்கள் அனைவரும் கீழ்க்கண்ட ஒப்பந்தத்திற்கு முன்வந்தனர். ஒரே ஒரு சமையற்காரர் இருப்பார். அவர் சைவ உணவு மட்டும் சமைப்பார். குறித்த நேரங்களில் அனைவரும் உணவை முடித்துவிட வேண்டும். வேலையாட்கள் அனைவரையும் வீட்டிற்கு அனுப்பிவிட வேண்டும் என்ற நிபந்தனைகளை ஒப்புக் கொண்டு வாக்குமூலம் வாங்கும் வேலை துவங்கிற்று. இதனால் செலவு மட்டுப்பட்டது. நேரம் மிச்சம் ஆயிற்று. ஆயிரக்கணக்கில் தங்கள் நண்பர்களுடன் மேளாவிற்கு வந்தது போல் திரண்டிருந்த விவசாயிகளைக் குறித்த நேரத்தில் விசாரித்து அனுப்புவதற்கு ஓரளவு இவர்களால் முடிந்தது. இவ்வாறு சக்தி விரயமும் ஒருவாறு குறைக்கப்பட்டது.

நாளாக நாளாக பெருங்கூட்டம் வந்து கொண்டிருந்தது. மோதிஹரி கோர்ட் சம்பவம் காந்தி யார் என்பதை பீகார் மக்களுக்கு உணர்த்தியிருந்தது. சாதாரண மக்களும் திரளாக வந்து காந்தியடிகளின் தரிசனம் காணவேண்டும் என்று துடித்துக்கொண்டிருந் தனர். இதை வக்கீல் பாபுக்களால் சமாளிக்க முடியவில்லை. ஆகவே இந்தப் பொறுப்பு **ஆச்சார்யா கிருபளானி** வசம் ஒப்படைக்கப் பட்டது. அவர் முக்கிய வாசலில் உயரமான ஆசனத்தில் அமர்ந்திருப்பார். வந்தவர்களை ஒழுங்குபடுத்தி வாசலுக்குமுன் உட்கார வைப் பார். இந்திய சரித்திரத்தையும், அதன் பழம் பெருமையையும் விவசாயிகள் ரசிக்கும் வண்ணம் கதைகள் ரூபத்தில் சொல்லி அவர் களை முண்டியடித்துக் கொண்டு உள்ளே போகாமல் தடுத்து நிறுத்தி வந்தார். வாக்கு மூலம் கொடுக்க வந்தவர்களை 'க்யூ' வரிசை யில் அனுப்பி வந்தார். இதனுல் விசாரணை தங்கு தடையின்றி நடைபெற்று வந்தது. மேலும் அவ்வப்போது பொதுமக்களைத் திருப்திப்படுத்துவதற்காக காந்தியடிகள் ஹஜாரி மால் தர்மசாலையின் மேல்மாடிக்கு வருவார். உடனே கூடியிருந்த மக்கள் ''காந்தி பாபுவிற்கு ஜே'' என்று கோஷமிட்டு ஆரவாரத்துடன் ஊர் திரும்புவர். (அந்தச் சமயத்தில் காந்திக்கு 'மகாத்மா' பட்டம் இல்லை என்பதை வாசகர் கள் நினைவிற் கொள்ளவேண்டும்.)

பீஹாரிகள் மிகவும் சாதுவானவர்கள். பயம் நிறைந்தவர்கள். அதிலும் வெள்ளைக் காரத் தோட்டமுதலாளிகளும் அவர்களுடைய

எடுபிடி ஆட்களும் அவர்களுக்கு அனுவசிய மான தொந்தரவுகளைக் கொடுத்ததால் கிலி அடித்துப் போயிருந்தார்கள். இதை அடிகள் நன்கு புரிந்துகொண்டார். ஆகவே அவர் களிடமிருந்து அச்சத்தை அகற்றத் திட்ட மிட்டார். வாக்குமூலங்கள் அளிக்கும் சமயத்தில் ரகசியப் போலீசார் மாறுவேடங்களில் அங்கு வந்திருந்தார்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டது. அவர்களிடம் வாக்குமூலம் வாங்கும்போது அருகில் அமர்ந்திருக்கலாம் என்று அடிகளே கூறிவிட்டார். போலீஸ் என்றவுடன் பயந்திருந்த விவசாயிகள் இதை அறிந்ததும் அச்சம் தவிர்த்தனர். எது உண்மையோ அதை மட்டும் வாக்குமூலத்தில் அளித்தனர். இவ்வாறு ''அச்சமே கீழ்களது ஆசாரம்'' என்று வள்ளுவர் கூறியுள்ளதை உணர்ந்த காந்தியடிகள் சாதாரண விவசாயிகளையும் பயமற்றவர்களாக்கினுர் என்பது கண்கூடு.

விசாரணை தீவிரமாய் நடைபெற்றுக் கொண்டிருந்த காலம். தோட்ட முதலாளிகளுக் கோ சொல்லொணுத் திகில். ஏனெனில் அவர்களின் அட்டூழியங்கள் பகிரங்கப்படுத்தப் பட்டு வந்தன. அச்சமயத்தில் ஒரு முதலாளி, ''யாரிந்த காந்தி? அவனுக்கு இங்கு என்ன வேலை? அவனைப் பார்த்தால் சுட்டுத் தள்ளிவிடுவேன்'' என்று சொன்னதாக அடிகளின் காதுகளுக்கு ஒரு செய்தி எட்டியது. அம்முதலாளியின் வீட்டு முகவரியைத் தெரிந்து கொண்டார் காந்தி. மறுநாள் அதிகாலையில் எழுந்து தன்னந்தனியே அவன் வீட்டிற்குச் சென்று கதவைத் தட்டினுர். அவன் கதவைத்

திறந்து வெளிவந்ததும், ''நான் தான் காந்தி. என்னைச் சுடுவதாகச் சொன்னீர்களாம். அதற்கு நான் தயாராக வந்துள்ளேன்'', என்றதும் அவன் நடுநடுங்கிப் போய் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். இந்தச் சம்வம் மக்களை விழிக்க வைத்தது. அச்சத்தை அறவே ஒழித்து தைரியத் துடன் தங்கள் காரியங்களைச் செய்ய முற் பட்டனர். இந்தச் சம்பாரண் சத்தியாக் கிரகத்தால் ஏற்பட்ட முதற்பலன் அச்சம் தவிர்த்தலே என்ருல் அது மிகையாகாது.

தோட்ட முதலாளிகளில் யாராவது ஒருவர் பற்றி அதிகமான புகார்கள் இருந்தால் அடிகள் அவரை நேரில் சந்தித்து அவருடைய விளக்கம் பெற்ருர். அல்லது அவருடன் நேரடிக் கடிதத் தொடர்பு கொண்டு அவருடைய பதில்களைப் பெற்ருர். இதன்மூலம் தோட்ட முதலாளி களின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் பெற அவர் எண்ணியிருந்தார். அரசு மேலதிகாரி களையும் அவசியம் வரும் போதெல்லாம் அவர் பார்த்துப் பேசத்தவறியதில்லை.

ஏதாவது செய்தி வேண்டுமெனில் பத்திரிகை யாளர்கள் அவரை நேரில் பேட்டி கண்டு எழுதிக்கொள்ளுமாறு செய்தி நிருபர்களுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார். இதனுல் ஆதர வற்ற வதந்திகளைப் பரப்புவதற்கு வழியில்லா மல் செய்திருந்தார். எனினும் தவறுகள் பல புரிந்துவந்த வெள்ளைக்காரத் தோட்ட முதலாளிகள் காந்தியைப் பற்றியும், பிரஜ்கி சோரி பிரசாத் பற்றியும் பல கட்டுக்கதை களைப் பரப்பி வந்தனர். ஆங்கிலேயர்கள் நடத்தும் செய்தித் தாள்க்ள் அவரை வேண்டா

விருந்தாளி என்றே பிரசுரித்தும், அவருடைய கூற்றுகளைத் திரித்துக் கூறியும் வந்தன என்பதும் உண்மையே. அளவுக்கு மீறின பொய்கள் காணப்படின் ஓரிரு தடவை அவற்றிற்கு மறுப்புகளும் விடுத்துள்ளார் காந்தியடிகள். இவ்வாருக ஆரம்பம் முதல் பொதுமக்களுக்கும், சம்பந்தப்பட்டவர்களுக்கும், அரசுக்கும் தெரிவிக்க வேண்டியவற்றைத் தவருது தக்க நேரத்தில் அறிவிப்பதில் தீவிர கவனஞ் செலுத்தி வந்தார்.

அத்தியாயம் 10

பெட்டையா விசாரணை

சம்பாரணின் வட பாகத்தில் உள்ளவர்கள் தூரத்திலுள்ள மோதிஹரிக்கு வந்து தங்களுடைய கஷ்டநஷ்டங்களைச் சொல்ல முடியாத நிலை. எனவே ஏப்ரல் 22 ஆம் நாள் மாலை 5 மணிக்கு காந்தி தன் சகாக்களுடன் **பெட்டையா** ரயில் நிலையத்தை அடைந்தார். பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் அங்கு அவரை வரவேற்கக் கூடியிருந்தார்கள் என்று கேள்விப்பட்ட காந்தி முந்தின ஸ்டேஷனிலேயே இறங்கி நெருக்கடியைச் சமாளித்தார். ஆரா வாரமான கோஷங்களுடன் ஜனத்திரள் அவரை **ஹஜாரிமால் தர்மசாலையில்** கொண்டு விட்டனர். மோதிஹரியில் செய்ததைப் போலவே இங்கும் வக்கீல் பாபுக்கள் அதிக அளவில் வந்து வாக்குமூலங்களை வாங்குவதற்கு அடிகளுக்கு உதவினர். மூன்ரும் நாள் அன்று பிரஜ்கிசோரி பிரசாத்துடன் **லௌகேரியா** என்ற கிராமத்திற்கு காந்தி சென்ருர்.

அங்கு தற்செயலாக வந்திருந்த **லூாயிஸ்** என்ற உதவி டிவிசனல் அலுவலர் கிராமவாசிகள் அபாரமான துணிச்சலுடன் மிக விவரமாய் தங்கள் வாக்குமூலங்கள் அளிப்பதை நேரில் கண்டு அசந்தே போய்விட்டார். காந்தி ஏப்ரல் **27** அன்று **முரளிபராவா** என்ற கிராமத்தில் வசித்த ராஜ்குமார்சுக்லாவின் வீட்டைப் பார்வையிட்டார். அவனுடைய சொத்திற்கு எவ்வளவு சேதம் விளைவித்தனர் முதலாளி களின் குண்டர்கள் என்பதை அங்கிருந்தவர்கள் போட்டி போட்டுக் கொண்டு அவரிடம் முறையிட்டனர். விவசாயிகளின் பரம எதிரியாயிருந்த **அம்மன்** என்ற முதலாளியையும் காந்தி கண்டு பேசினார். லூாயிஸ் மனதில் வெள்ளைக்கார முதலாளிகள் பெரும்பாடு படப்போகிறார்கள் என்று பட்டதால் காந்தியை வாக்குமூலம் வாங்குவதை உடனடியாக நிறுத்தச் சொல்லி அவரை வெளியேற்றவேண்டும் என்று சர்க்காருக்கு ஓர் அறிக்கை எழுதி அனுப்பினான். அதற்குச் சரியான பதிலை அடிகள் தயாரித்து லூாயிஸுக்கு அனுப்பி வைத்தார். முதலாளிகளும் கவர்னர் ஜெனரல் உத்தரவின் பேரில் அங்கு வந்துள்ள காந்தி எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்ற எண்ணம் விவசாயிகளிடம் படிந்துள்ளது. இது அப்பகுதியிலுள்ள வெள்ளை முதலாளி களைப் பெரிதும் பாதிக்கிறது என்று அரசிற்கு விண்ணப்பித்திருந்தனர். மே 5 ஆம் நாள் **காக்ஸ், ஜேம்சன்** என்ற முதலாளிகளின் இரு பிரதிநிதிகள் **ராஞ்சியில்** கவர்னரைச் சந்தித்து காந்தி சம்பாரணில் தொடர்ந்து இருந்தால்

என்ன நடக்கும் என்று யாரும் சொல்ல முடியாது என்று பிரஸ்தாபித்தனர். கவர்னரும் அன்றுள்ள நிலையை மறுபரிசீலனை செய்வதாக வாக்களித்தார், இதற்கேற்ப மே 6ஆம் தேதி தலைமைச் செயலாளர் **மக் பெர்சனிட** மிருந்து மே 10ஆம் நாள் பாட்னுவில் ரெவினியூ மெம்பர் **மௌடேயைச்** சந்திக்குமாறு காந்திக்கு ஒரு தந்தியும் வந்தது.

பிரஜ்கிசோரி பிரசாத்தும் அடிகளும் மே 9 அன்று பாட்னு வந்து சேர்ந்தனர். பெருங் கூட்டம் அவர்களை அங்கு வரவேற்றது. மௌலாஞு மஜாருல் ஹக் வீட்டில் அடிகள் அன்றிரவைக் கழித்தார். மே 10ல் மௌடேயைச் சந்தித்தபோது தன்னுடைய அறிக்கையைச் சமர்ப்பிப்பதுடன் தன் கூடப்பணியாற்றும் வக்கீல்களை வெளியேற்ற வேண்டும் என்று காந்தியிடம் கூறினுர். ரத்தினச் சுருக்கமான அறிக்கையை பெட்டையாவிலிருந்து அனுப்புவதாயும், ஆனுல் தன்னுடைய சகாக்களை அனுப்பமுடியாது என்பதையும் அவனுக்குத் தெளிவுபடுத்தி விட்டார் காந்தி.

தான் வாக்களித்தபடி மே 11 அன்று தன்னுடைய அறிக்கையை ரெவினியூ மெம்பருக்கு அனுப்பி வைத்தார். அதில் முதலாளிகளின் அக்கிரமங்களை ஒன்றுவிடாது வரிசைப் படுத்தியிருந்தார். அவற்றிற்கான ருஜுக்கள் அவரிடம் உள்ளன என்பதை மட்டும் சுட்டிக் காட்டியிருந்தார். அரசு எதிர்பார்க்கும் செட்டில் மெண்ட் அலுவலரின் அறிக்கையில் இவ் விஷயங்களைக் காணமுடியாது என்றும் அறிவுறுத்தியிருந்தார். இறுதியாக முதலாளி

களோ சுதந்திரம் அனுபவித்து வரும் வெள்ளைக் காரர்கள். ஆகவே அதே சுதந்திரத்தை விவசாயிகளும் அனுபவித்தல் அவசியம் என்பதை ஒப்புக்கொள்வார்கள் என்றும் எடுத்துக் காட்டியிருந்தார். இதனுடைய பிரதி களை திர்குட் டிவிசன் கமிஷனர், சம்பாரண் கலெக்டர், பெட்டையா சப்டி விசன் அலுவலர், பெட்டையா ராஜ் மானேஜர், பீகார் மாநில, மாவட்ட முதலாளிகளின் சங்கச் செயலாளர் கட்கும் அனுப்பி வைத்தார். எந்த நேரத்திலும் இவ்விஷயத்தில் அரசுடன் ஒத்துழைக்கத் தயார் என்றும் அதில் குறிப்பிட்டிருந்தார்.

அத்தியாயம் 11
சதித்திட்டங்கள்

காந்தி அனுப்பிய அறிக்கை கவர்னரிடம் வந்து சேர்ந்தது. ஜூன் 30க்குள் செட்டில் மெண்ட் அலுவலர், மாவட்ட அலுவலர்கள், தோட்ட முதலாளிகளிடமிருந்து அறிக்கைகள் கிடைக்க வேண்டுமென்று அரசு அறிவித்தது. அதனுல் தோட்ட முதலாளிகட்குப் பதட்டம் ஏற்பட்டது. மாவட்ட அலுவலர்களோ தங் களுடைய மரியாதை போய்விட்டது என்று கருதினர். எனவே காந்தி செய்தது தவறு என்று காட்டி அவரை சம்பாரணிலிருந்து வெளியேற்றும் சதியில் இறங்கினர்.

தோக்ரஹா தொழிற்சாலையின் அதிபர் **ஹோல்ட்டும்** என்பவன் தன்னுடைய விவசாயி கள் நல்ல நிலையில் உள்ளார்கள் என்பதை நேரில் வந்து பாருங்கள் என்று காந்திக்குத் தகவல் கொடுத்தான். மே 16 அன்று காந்தி,

ராஜேந்திரப் பிரசாத், கிருபளானி மூவரும் அங்குச் சென்றனர். போகும் வழியிலேயே அந்த முதலாளி ஆட்களைத் தயார்செய்து வைத்துள்ளான் என்று விவரம் தெரியவந்தது. ஒரு கிழவன் ஹோல்ட்டும் மிகவும் நல்ல எஜமானன் என்று புகழ ஆரம்பித்ததும் அங்கு கூடியிருந்த 300 பேர்களில் பலர் ஒரே குரலில் முழுப்பொய் என்று கத்த ஆரம் பித்தனர். ''அவரைச் சொல்ல விடுங்கள். பின்னால் உங்களையும் கேட்கிறேன்'' என்றார் காந்தி. தங்கள் முறை வந்ததும் எந்தெந்த வகைகளில் அவர்களை வருத்தி, கொள்ளை லாபம் அடித்தான் என்பதை ஆதியோடந்தமாய் அவர்கள் கூறினதும் ஹோல்ட்டும் தன்னுடன் இருந்த மாஜிஸ்திரேட் லூயிஸுடன் அவ் விடத்தை விட்டு நகன்றுசென்றான். எனினும் காந்தி மற்றவர்களை விசாரித்து விட்டு ஒரு நீண்ட கடிதம் ஹோல்ட்டுமுக்கு எழுதி, நியாயமானதைச் செய்யுங்கள் என்று கேட்டுக் கொண்டார். மே 18 இரவில் கைவிடப்பட்ட கச்சேரியும் ஒரு வீடும் அங்கு எரிந்து சாம்பலாயின. அந்தத் தொழிற்சாலை ஆட்களே அவ்வாறு செய்துவிட்டார்கள் என்று அவ்வூர் வாசிகள் அடிகளிடம் எடுத்துக் கூறினர். ஆனால் இந்த வம்புதும்புகளுக்கெல்லாம் மூல காரணம் காந்தியே என்று முதலாளிகளும், அரசு அலுவலர்களும் மேலிடத்திற்குக் தகவல் அனுப்பினர். அவர்கள் இவ்வாறு செய்வார் கள் என்று எதிர்பார்த்த காந்தி கலெக்டர் ஹேகாக்கிற்கு உண்மையான ஒரு நீண்ட அறிக்கையை அனுப்பி வைத்தார். அதன்

நகலை லூயிஸுக்கும் அனுப்பியிருந்தார். ஆனால் மே 23 அன்று ஹேகாக் இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தை அமல்படுத்தி காந்தியை மாகாணத்தை விட்டு வெளியேற்ற வேண்டும் என்று திர்குட் கமிஷனருக்குச் சிபாரிசு செய்தான். மறுநாள் தலைமைச் செயலருக்கு கமிஷனர் ஒரு கடிதம் எழுதினார். அதில் "ஒரு விசாரணைக் கமிஷன் அமைத்து புகார்களை விசாரிக்க வேண்டும். குறைகளை நிவர்த்தி செய்ய உருப்படியான யோசனைகளை அது கூற வேண்டும். இவற்றிற்கு காந்தி மறுப்புத் தெரிவித்தால் மக்களே அவரை உதாசீனம் செய்து விடுவர்", என யோசனை கூறியிருந்தார். இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டு மே 29 அன்று காந்திக்கு ஒரு சம்மன் கிடைத்தது. அதன்படி ஜுன் 4 ஆந் தேதி ராஞ்சியில் கவர்னர் எட்வர்ட் கெய்ட்டைச் சந்திக்கவேண்டும் என்றிருந்தது. இதில் ஒரு சூழ்ச்சியிருப்பதை காந்தியின் சகாக்கள் யூகித்தனர். மாளவியாவை பாட்னாவிற்குச் வரச்சொல்லி தந்தி அடித்தனர். ராஜேந்திரப் பிரசாத் பாட்னாவிற்குச் சென்று தலைவர்களுடன் ஆலோசனைகளை நடத்தப் புறப்பட்டார். ராஞ்சியில் கஸ்தூரிபாவும், தேவதாசும் தன்னைச் சந்திக்குமாறு காந்தி சபர்மதி ஆசிரமத்திற்குத் தகவல் கொடுத்தார். ஜுன் 2 அன்றே காந்தி பாட்னா சென்றார். அவரைக் கைது செய்தால் பண்டித **மாளவியா** அல்லது **மஜாருல்ஹக்** சம்பாரண் பணியைத் தொடரவேண்டும் என்று தீர்மானிக்கப்பெற்றது.

அத்தியாயம் 12

கவர்னர் விசாரணை

அனைவரும் கவலையுடன் எதிர்பார்த்த ஜூன் 4 வந்தது. சரியாக 10 மணிக்கு காந்தி சர் எட்வர்ட் கெய்ட்டைச் சந்தித்தார். இந்தச் சந்திப்பு 6 மணி நேரம் நடைபெற்றது. மாலை 5 மணிக்கு காந்தி தன் இருப்பிடம் வந்து சேர்ந்தார். ஏற்கனவே தீர்மானித்தபடி மோதி ஹரிக்கும், பெட்டையாவுக்கும் இருதந்திகள் பறந்தன. ''இன்றைய பேட்டி திருப்திகரம். மீண்டும் நாளை நடக்கும்'' என்பது அவற்றின் வாசகம். இரண்டு நாட்கள் நடைபெற்ற கூட்டத்தின் பயனாக கவர்னர் இந்தப் பிரச்னையை உடனடியாகத் தீர்க்க வேண்டும் என்று விரும்பினார். அதனால் காந்தியை நிர்வாகக் கௌன்சில் உறுப்பினர்களிடமும் விவரங்களை எடுத்துக் கூற வைத்தார். அனைவரும் உண்மையை உணர்ந்ததால் ஒரு விசாரணைக் குழுவை அமைக்கத் திட்டமிட்டனர். அதில் காந்தியும் ஓர் அங்கத்தினராய் இருக்க வேண்டும் என்று கவர்னர் கேட்டுக் கொண்டார். காந்தி எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கவர்னர் வற்புறுத்தவே காந்தி வேறு வழியின்றி உறுப்பினராக ஒப்புக்கொண்டார். விசாரணை நடைபெறும் பொழுது தன்னுடைய சகாக்களுடன் கலந்துரையாடவும், தன்னை விவசாயிகளின் வக்கீல் என்பதை அரசு ஏற்றுக் கொள்ளவும், விசாரணைக் குழுவின் பரிந்துரைகள் தனக்குத் திருப்தி தரவில்லையெனில் விவசாயிகளுக்கு தக்க யோசனைகள் கூறி வழி

நடத்த தனக்கு உரிமை உண்டென்றும் ஏற்றுக் கொண்டால் ஒப்புக் கொள்வதாக கவர்னரிடம் அறிவித்தார். அவரும் அதற்குச் சரி என்று கூறி விட்டார். முடிவுகள் பரம ரகசியமாய் வைக்கப் பெற்று சர்க்கார் மூலமே வெளி யிடப்பட வேண்டும் என்ற நிபந்தனையும் ஏற்றுக் கொள்ளப் பெற்றது. இந்த விசாரணைக் குழுவின் உறுப்பினர்களின் பட்டியல் ஜூன் 12 ஆந் தேதி பீஹார் ஒரிசா அரசின் தீர்மானப்படி செய்தித் தாள்களுக்கு அனுப்பப் பெற்றது.

தலைவர்: *1)* திரு. **எப். ஜி. ஸ்லை** மத்திய மாகாணங்களின் கமிஷனர்

உறுப்பினர்கள்: *2)* திரு. **எல். சி. ஆடமி.** ஐ. சி. எஸ்

3) திரு. **ராஜா ஹரிஹர் பிரசாத் நாராயண் சிங்,**

4) திரு. டி. ஜே. ரீயிட், மெம்பர் பீஹார் -ஒரிசா

5) திரு. **ஜி. ரெய்லி** ஐ. சி. எஸ். இந்திய அரசின் நிதி இலாகா உதவிச் செயலர்

6) திரு. எம். கே. காந்தி

இதன் செயலர்: திரு இ. டானர் ஐ. சி. எஸ். தென் பீஹார் செட்டில்மெண்ட் அலுவலர்.

இந்தக் கமிட்டி ஜூலை 15 முதல் கூடி சம்பாரண் விவசாயிகளின் சகல பிரச்னை களையும் தீர விசாரித்து, அவற்றை நீக்க வழி முறைகளையும் 3 மாத காலக் கெடுவிற்குள் அளிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பெற்றது. உடல் நலக் குறைவினால் ராஜினாமாச்செய்த

திரு. ராஜா ஹரிஹர் பிரசாத்திற்குப் பதிலாக திரு. **ராஜா கிரிக்யானந்த சிங்** உறுப்பினர் பதவியேற்ருர்.

விசாரணைக் கமிட்டியில் காந்தியைச் சேர்த்ததை தோட்ட முதலாளிகளும், ஸ்டேட்ஸ் மன் போன்ற ஆங்கில இதழ்களும் எதிர்த்துப் போராடின. அவரைப் பற்றி மிகத் தவருன செய்திகளை அவை எழுதி வந்தன. **பயனீர்** என்ற பத்திரிகையில் அச்சடிக்கப்பெற்ற விஷமத்தனமான செய்திகளை காந்தி ஆணித் தரமாய் மறுக்க வேண்டிய நிலையும் ஏற் பட்டது.

ஜுன் 16 அன்று காந்தி சபர்மதி ஆசிரமத்தில் ஒரு சில நாட்கள் தங்குவதற்காகச் சென்ருர். அவளுடைய சகாக்கள் பெட்டை யாவிலிருந்து மோதிஹரிக்கு வந்து 60 தொழிற்சாலைகள் பற்றி 850 கிராமங்களி லிருந்து வந்த 8000க்கும் அதிகமான விவ சாயிகள் மனமுவந்தளித்த வாக்கு மூலங்களை ஒழுங்கு படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.

அத்தியாயம் 13
விசாரணைக் குழுவின் நடவடிக்கைகள்

குழுவின் அங்கத்தினர்கள் தீர்மானித்த படி பெட்டையா, மோதிஹரி ஆகிய இடங் களில் மொத்தம் 8 விசாரணைகள் நடை பெற்றன. 19 சாட்சிகள் விசாரிக்கப் பெற்ற னர். இவர்களுள் 4 அரசு அலுவலர்கள், 3 குடியானவர்களின் பிரதிநிதிகள், ஒரு பீகார்

தோட்ட முதலாளிகளின் சங்கப் பிரதிநிதி, 11 அவுரித் தொழிற்சாலை மானேஜர்கள் அடங்கும். வேறு 8 தொழிற்சாலைகளில் உள்ள பதிவு ஏடுகள், கணக்குகளையும் சோதித்துப் பார்த்தனர். எழுத்து வடிவில் வாக்குமூலம் தந்தவர்களையும், கூட்டமாய் வந்த விவசாயி களையும் விசாரித்தனர். இவ்வாறு ஆறு வாரங்கள் இக் குழு வேலை செய்து ஆகஸ்ட் இறுதியில் தன் வேலையை ஒருவாறு முடித்தது. செப்டெம்பரில் ராஞ்சியில் மீண்டும் கூடிற்று. 1917 அக்டோபர் 3 ஆம் நாள் நீண்ட பல விவாதங்களுக்குப் பிறகு விவசாயிகளுக்கு அனுசரணையான தன்னுடைய சிபாரிசுகளில் குழு கையெழுத்திட்டது. இவை இரண்டு ஏடு களில், ஒன்றில் 24 பக்கங்கள், மற்றொன்றில் 164 பக்கங்கள், பிரசுரிக்கப்பட்டன. இவை ''சம்பாரண் விவசாயிகளின் நிலைமைகள் பற்றி ஆராய்ந்த கமிட்டியின் அறிக்கை'' என்ற பெயரில் வெளியிடப் பெற்றன. குழு ஒன்றே ஒன்றைத் தவிர, மற்ற எல்லாப் பரிந்துரை களையும் **ஏக மனதாகத் தீர்மானித்திருந்தது** இதன் ஒரு சிறப்பு அம்சமாகும்.

அக்டோபர் 11 ஆம் நாள் காந்தி மோதி ஹரியிலிருந்து பெட்டையா சென்றார். அங்கு அவருக்கு வீர வரவேற்பு அளிக்கப் பெற்றது. கமிட்டியின் பரிந்துரைகளை காந்தி மறுநாள் ஒரு பொதுக்கூட்டத்தில் அறிவிக்கப் போகிறார் என்று தெரிந்து, லூயிஸ் அவரைச் சந்தித் தான். அப்போது கவர்னரின் சம்மதம் பெற்றே தான் அவ்வாறு செய்யப்போவதாக காந்தி அறிவித்தார். அதன்படி கூட்டத்தில் அறிவித்த

மறுநாளே பெட்டையாவை விட்டு காந்தி போய் விட்டார். இது விஷயமாக தங்களைச் சந்திக்க வேண்டும் என்று முதலாளிகள் சங்கத் தலைவர் கேட்டுக் கொண்டதை கவர்னர் நிராகரித்து விட்டார்.

கமிட்டியின் சிபாரிசுகளில் மிக முக்கிய மானவை கீழ் வருமாறு:-

1. தீன் கதியா முறை ஒழிக்கப்படுகிறது. அது சட்ட விரோதமானது.
2. விவசாயிகளுக்கும் அவுரித் தோட்ட முத லாளிகளுக்கும் ஏற்படும் ஒப்பந்தங்கள் அவர் கள் இருவரின் பூரண சம்மதத்தின் பேரில் தான் இருக்கவேண்டும்.

   அத்தகைய ஒப்பந்தங்கள் மூன்று ஆண்டு களுக்குமேல் நீடிக்கக்கூடாது. அந்த ஒப்பந் தப்படி அவுரிச் செடிகளின் எடையைப் பொருத்தே பணம் தரப்படும். இரண்டு பேர்களும் இதை ஒத்துக்கொள்ளும் பட்சத் தில் நடுவர் ஒருவரே பணத்தை நிர்ணயிப் பார்.

   முதலாளிகளின் சங்கம் அவ்வப்போது நிர் ணயிக்கும் தொகைக்கும் குறைந்த பணம் தரக்கூடாது. இந்த விகிதத்தை கமிஷனர் ஒப்புக்கொள்ளவேண்டும். விவசாயினு டைய எந்தக் குறிப்பிட்ட நிலப் பகுதியிலும் அவுரி பயிரிடவேண்டும் என்பது கட்டாய மில்லை. **ஷாரா பெஷி** என்ற அதிக வரி விதிப்பதை சில இடங்களில் 20%க்கும், மற்றும் சில இடங்களில் 26%க்கும் குறைக்கப் பட்டது.

கூலிகளை முதலாளிகளின் சங்கம் நிர்ணயித்து கமிஷனரின் ஒப்புதல் பெற்றே அமுல் நடத்தவேண்டும்.

பொதுவாக நினைத்தபடி பணம் வசூலிக்கவோ, வாங்கின பணத்திற்கு ரசீது கொடுக்காமல் இருக்கவோ, கலப்பைகள், வண்டிகளை இலவசமாய் உபயோகப்படுத்தவோ முதலாளிகளுக்கு இடமில்லாதபடி குழுவின் அறிக்கை செய்து விட்டது.

இவ்வாறு நூறு ஆண்டுகளுக்கு மேல் பீகார் விவசாயிகளை வருத்தி வந்த இந்த **தீன் கதியா** முறை காந்தியடிகளின் தலையீட்டால் சுமுகமான முறையில் அதிகச் செலவோ, துன்பங்கள் இல்லாமலோ ஓராண்டிற்குள் மாநிலத்தை விட்டே விரட்டியடிக்கப்பட்டது. இதற்கு அடிப்படைக் காரணம் அவர் கையாண்ட சத்தியம், அஹிம்சை என்ற வழி முறைகளே. கவர்னர் **சர் எட்வர்ட் கெய்ட்** காந்தியடிகளின் மூலம் இந்த அநீதியின் முழு விவரங்களையும் அறிந்து கொண்டதால்தான் வெள்ளைக்கார முதலாளிகளின் முழு எதிர்ப்புகளையும் மீறி சர்வ சம்மதி உண்டாக ஒத்துழைத்தார். அவருடைய முயற்சி நம்முடைய பாராட்டுதலுக்குரியது. **சத்தியமே வெல்லும்** என்ற பாரத நாட்டின் கோட்பாடு காந்தியடிகளால் இந்தியாவில் முதன் முறையாக 1917ல் நிரூபிக்கப்பெற்றது. அகில இந்திய அளவில் பரவலாக காந்தியின் நாமம் அனைவர்க்கும் தெரியும் அளவிற்கு சம்பாரண் சத்தியாக்கிரகம் உதவிற்று என்றுல் மிகையாகாது.

அத்தியாயம் 14

மனத்தில் இருத்த வேண்டியவை

மாவட்ட அளவில் துவக்கப்பெற்ற இந்தச் சத்தியாக்கிரகம் காந்தியடிகள் இந்தியாவில் நடத்திய முதல் சத்தியாக்கிரகம் எனலாம். இது வெற்றி பெற அவர் கையாண்ட முறைகள் எந்தச் சிக்கல்களையும் களைந்தெறிய நாம் 'அனுசரிக்க வேண்டியவை என்பதை நாம் உணர வேண்டும். அவை எவை?

1. பிறர் சொல்வதை அப்படியே எடுத்துக் கொள்ளாமல் தானே நேரில் அந்த இடத்திற்குச் சென்று காரண காரியங் களை ஆராய வேண்டும்.
2. பிரச்னைகளுக்குரிய இருவரிடமும் உண்மை நிலைமையை உணர வைக்க வேண்டும்.
3. தீமையை எதிர்க்க வேண்டுமேயொழிய தீமை செய்பவனை அல்ல என்பதைப் புரிய வைக்க வேண்டும். அதனுல் தான் தோட்ட முதலாளிகளையும் அவர் கண்டு பேசினுர்.
4. இதில் ஈடுபட்டவர்களிடம் காணப்பெறும் பயத்தை முதலில் அகற்ற வேண்டும்.
5. அனுகூலமற்ற சூழ்நிலையிலும் சத்தி யத்தையே பேச பின்பற்ற வேண்டும்.
6. சேவை செய்ய முற்படுபவர்கள் கட்டுப் பாடான வாழ்க்கை வாழப் பழகவேண் டும். பீகார் வக்கீல்களை ஒழுங்கு படுத்திய விதமே சுவாரஸ்யமானது.

7. காலம் பொன் போன்றது என்ற உணர்வுடன் குறிப்பிட்ட நேரத்தில் குறித்த காரியங்களில் ஈடுபடும் பழக்கம் பெற வேண்டும்.

8. ஜாதி, சமய, இன உணர்வுகளோ, சொந்த வசதிகளோ பொதுப்பணிகளில் குறுக்கிடக் கூடாது.

9. ஒரு பக்கம் தீமையை எதிர்த்துப் போராடும் போது மறுபக்கம் அதை அகற்றும் ஆக்க ரீதியான வழிகளையும் கடைப்பிடிக்க வேண்டும்.

10. தேவைக்கு அதிகமான ஆட்களைப் பயன்படுத்தக் கூடாது.

11. செலவைக் கட்டுப் படுத்துவதோடு, கணக்கும் சரியாக வைக்க வேண்டும்.

12. உண்மையான நிகழ்ச்சிகளை மட்டும் அவ்வப்போது பிரசுரிக்க வேண்டும்.

13. அறியாமையை அகற்றும் பணி முதலிடம் பெற வேண்டும்.

14. வறுமையைப் போக்கும் திட்டங்களை அமுல்படுத்த வேண்டும்.

15. ஆச்சார்யா கிருபளானி , ராஜேந்திர பிரசாத் போன்ற தேச பக்தர்கள் காந்திக்கு அறிமுகமாயினர்.

16. பொதுச் சுகாதாரத்தை எளிய வழிகளில் பேண வேண்டும்.

பொதுவாக சத்தியாக்கிரகமும் நிர்மாணப் பணிகளும் இரண்டறக் கலக்க வேண்டும்.

அத்தியாயம் 15

நடைபெற்ற சில நிர்மாணப் பணிகள்

தீன் கதியா விவசாயிகளின் குடிசைகள்

ஒரு நாள் சம்பாரண் பகுதியில் ஒரு கிராமத்திற்கு காந்தியடிகள் கஸ்தூரிபாவுடன் சென்றிருந்தார். ஏராளமான பெண்கள் அவரைப் பார்க்க வந்தனர். அவர்கள் அனைவரும் அழுக்குப் படிந்த சேலைகளை உடுத்தியிருந்தனர். கஸ்தூரிபாவை நோக்கி இவர்கள் ஏன் சேலையைத் துவைத்துக் கட்டக் கூடாது என்று கேட்கச் சொன்னர். அருகிலிருந்த ஒரு பெண் கஸ்தூரி பாவைத் தன் வீட்டிற்குள் அழைத்துச் சென்ருள். அங்கு ஏதாவது பெட்டியோ, பீரோவோ இல்லையென்பதைச் சுட்டிக் காட்டினுள். தனக்கிருப்பது ஒரு சேலைதான். தான் எப்படி அதைத் தினமும் துவைத்துக் கட்டமுடியும்? மாற்றுச்சேலைக்கு

ஏற்பாடு செய்தால், காந்தி சொல்லுகிற மாதிரி தினமும் துப்புரவாக இருப்பதாக அவள் உறுதியளித்தாள். அத்தனை கொடிய வறுமையில் பீகார்வாசிகள் இருந்தனர் என் பதை அடிகள் 1917ல் உணர்ந்து கொண்டார். இது அவர் பிற்காலத்தில் இராட்டையைப் பரப்பினதற்கு முன்னோடி என்று கூடக் கூறலாம் அல்லவா?

கிராம வாசிகள் அங்கு சிரங்காலும், காய்ச்சலாலும் கஷ்டப்பட்டுக் கொண்டிருப் பதைக் கண்ணுரக் கண்டார் காந்தி. அதனால் இந்திய ஊழியர்கள் சங்கத்தைச் சேர்ந்த **டாக்டர் தேவ்** அவர்களை வர வழைத் திருந்தார். அவருடன் சேர்ந்து **கஸ்தூரிபா, அவந்திகாபாய், துர்காபாய் தேசாய், ஆனந்தி பாய், மணிபென் பரிக்** போன்ற பெண் ஊழியர்களும், **தேவதாஸ், நரஹரி பரீக், மகாதேவ தேசாய், கங்காதரராவ் தேஷ் பாண்டே** போன்ற விரல்விட்டு எண்ணக்கூடிய ஆண்களும் கிராமத் துப்புரவில் ஈடுபடுத்தப் பட்டனர். இவர்கள் **விளக்கெண்ணெய், கொய்னு, கந்தகக் களிம்பு** இம்மூன்றை மட்டும் பயன்படுத்தினர். நோயுற்றவர்களுக்கு முதலில் விளக்கெண்ணெய் கொடுத்து மலக்குடலைச் சுத்தம் செய்தனர். மலேரியாக் காய்ச்சலில் துன்புற்றவர்கட்கு கொய்னு அளிக்கப்பெற்றது. சிரங்கு முதலிய சர்மநோய் உள்ளவர்கள் கந்தகக் களிம்பை புண்களில் தடவினர். இவ்வாறு வியாதி நீங்கியதும் அவர்களைக் கொண்டு கிணற்றுச் சுற்றுப் புறத்துப்புரவு, கழிவு வாய்க்கால் வெட்டுதல், மலஜலக்

குழிகள் தோண்டுதல் ஆகிய இதர பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறு உடல் நலம் பேணுவதன் அவசியத்தை இவர்கள் கிராம வாசிகளுக்கு உணர்த்தி வந்தனர்.

குழந்தைகள் பராமரிப்பும் மிகவும் மட்ட மாக இருந்ததை அடிகள் கண்ணுற்ருர். அவர்களைப் பள்ளிக்கு அனுப்பாமல் சொற்பக் காசுகளுக்காக வேலைகளில் அமர்த்தி வந்தனர் பெற்றேர்கள். இதை மாற்றியமைக்க ஆறு கிராமங்களில் இரண்டிரண்டு பேர் ஆசிரியர் களாக அனுப்பப்பட்டனர். இவர்களுக்குத் தங்க இடமும், உணவும் அளிப்பது கிராம வாசிகளின் பொறுப்பு. இவர்கள் அங்குள்ள மண்ணைக் கொண்டு மக்கள் ஒத்துழைப்புடன் சுவர்கள் எழுப்பினர். மூங்கிலைக் கொண்டு கூரை வேய்ந்தனர். காற்ருேட்டமுள்ள, அதே சமயத்தில் செலவில்லாத பள்ளிக் கட்டிடங் கள் அங்கு எழுந்தன. ஒரு சில ஊர்களில் முதலாளிகளின் ஏஜெண்டுகள் இக் கட்டிடங் களுக்குத் தீ வைத்து விட்டனர். அப்பொழுது ஊரே திரண்டு பக்கா ஓட்டுக் கட்டிடமே கட்டிக்கொடுக்கும் அளவிற்கு உற்சாகம் பெற்றனர். பள்ளிக்கு தங்கள் குழந்தைகளைப் பெற்ருேர்கள் அனுப்ப முன் வந்தனர். அங்கு அவர்கள் எழுத, எண்ணப் படித்தோடு பொது அறிவும் பெற்றனர். இவ்வாறு கிராமங்களில் அறியாமையைப் போக்க சுய முயற்சித் திட்டத்தை ஊக்குவித்தார் காந்தியடிகள்.

37612/32181

காந்தியத் தொண்டர்கள் பிதர்வாவில் கட்டிய மக்கள் பள்ளிக்கூடம்

விவசாய நாட்டில் பசுக்கள் ஒரு வரப் பிரசாதம், பசுப் பாதுகாப்புத் திட்டத்தை சம்பாரணில் அமுல்படுத்த காந்தி எண்ணி யிருந்தார். ஆனுல் அவர் திடீரென்று அகமதா பாத்திற்கு வர வேண்டிய சூழல் ஏற்பட்டதால் பீகாரில் இது நடைபெற முடியாமற் போயிற்று.

இவ்வாறு பீகார் விவசாயிகளின் பிரச்னையைத் தீர்ப்பதில் முனைந்து வெற்றி பெற்றதன் மூலம் காந்தி இந்தியாவில் உள்ள அனைத்து மக்களுக்கும் அறிமுகமானுர்.

எமது இதர வெளியீடுகள்

1. கிராமமே இந்தியாவின் உயிர்நாடி
2. கழிவா, செல்வமா
3. வாழ்விக்க வந்த கதர்
4. நேரு மாமா
5. காருண்ய வள்ளல் காந்தி
6. நாட்டிற்கு உகந்த நயமான கல்வி
7. பூ தான முனிவர்
8. காந்தி கண்ட தர்மகர்த்தா

விபரங்களுக்கு

தமிழ்நாடு ஆதாரக்கல்வி சங்கம்,

காந்திநிகேதன் ஆசிரமம்

T. கல்லுப்பட்டி-626 702